ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணு.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
தொடர்ந்து பிரசுரிக்கும் விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி வரு தை மீ 18உ (31—1—1932) | மலர் 40

பலமுள்ளவீரபுருடனாக,

குமரனாக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன மொத்துவாழ, இல்லற, இன்பம் அனுபவிக்க, புத்திர பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்க பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்விக்கு அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பத்தியம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ 10.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி, S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, நிரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊறல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2

எல்லா மருந்துகளுக்கும் பாங்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினால் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணெ.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது.)

சகோதர, சகோதரிகளே! வெட்டைவாய்வு (அஷ்ட) எட்டு விதங்களாக, கர்ப்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேக வாய்வு என்று பெயர் பெற்ற கோடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரததில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, திணரல், கொகக்ருமல், காசமாகவும், கைகளில் தங்கி, சூலைகளாகவும், நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, சூதககட்டிகள். பக்க விலா இழுபபு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள். மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலட்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் [விரிக்கிர் பெருகும்] அனந்த மேக வாய்வு ரோகிகளும, 3 நேரம் நம். கோஷாயி மேக எண்ணெ சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நான்பாலியதேஜசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சிபெற்றுவருவது பிரத்தியக்ஷம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள தூர்நீர்களை அகற்றி எல்லா அவ்யவங்களிலும சுதத இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயதை இருகச்செய்து காக்கும காயகாபம். 3 நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணெ கொண்ட சீசா 1க்கு ரூ. 7—0—0. பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை,

தென்னூர், திருச்சி.

சுயமரியாதைச் சுடர்! முதல் இதழ் வெளிவந்துவிட்டது!

சுயராஜியம் யாருக்கு?
(முதற் பாகம்.)

தோழர், M. சிங்காரவேலு B. A., B. L.,

எழுதியது.

நமது "சுயமரியாதைச் சுடர்" என்னும் புத்தக வரிசையில் மேற்கண்ட புத்தகம் முதல் இதழாக வெளிவந்து விட்டது. இதில் அறிஞர் சிங்காரவேலு, வழக்கமாக வுள்ள தமது எளிய நடையில் மிக ஆணித்திரமாக, சமூகக்கொடுமை, ஜாதிக்கொடுமை, மதக்கொடுமை, அரசியல் கொடுமை, பொருளாதாரக் கொடுமை, முதலியவற்றையும் காங்கிரசின் கள்ள நியாயம், தீண்டாமை யொழிப்பு, முதலிய பல விஷயங்களையும் நன்கு எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

விலை அணா ஒன்று தான்.

தமிழ் நாடெங்கும் விற்பனை ஏஜண்டுகள் தேவை.

தாராளமான நிபந்தனைகள்! ஏராளமான கமிஷன்!

விபரங்களுக்கு உடனே எழுதவும்.

விலாசம்:---

கற்பகம் கம்பெனி, (புத்தக இலாக்கா)
257, லிங்கசெட்டித் தெரு,
ஜி. டி: மதராஸ்.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது

உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்: —
மானேஜர், "முன்னேற்றம்"
152 கிளிகிரோட், சிங்கப்பூர்

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

காந்தி பக்தியும் ராமபக்தியும் ஒன்றே.

இல்வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்க விரும்பினால் நமது

தங்கபஸ்பம்

மனோரஞ்சித லேகியத்தில் சேர்த்துச்சாப்பிடுங்கள்.

தாது க்ஷீணத்தை நிவர்த்திக்கும். தாது விர்த்தியடையும். நீர்த்துப்போன இந்திரியத்தை இறுக்கி மணியாக்கிவிடும். அடங்காத ஆண்மை, வீரியம் உண்டாகும். சோம்பல், அசதி, சோர்வு நீங்கும். தேக பலம், தேஜஸ், அறிவு வளர்ச்சி, மனோ வலிமை உண்டாகும். 30 வேளை தங்க பஸ்பம் ரூ. 7. 30 வேளை லேகியம் ரூ. 3. வி. பி. செலவு வேறு. வெளிநாட்டார் ஆர்டருடன் ரூ. 5 முன்பணமனுப்பவும்.

குறிப்பு:— நம்மிடம் சகல வியாதிகளுக்கும் வேண்டிய உயர்ந்த மருந்துகள் கிடைக்கும். வியாதி விபரம் எழுதவும்.

S. ராஜகோபால் பிள்ளை, தெண்டபாணி வைத்தியசாலை, பழநி. (S. I.)

(The Work before us in India)

ஜஸ்டிஸ் கட்சியின் கூட்டுறவு.

நாம் செய்யவேண்டிய வேலை என்ன?

(தோழர். ம. சிங்காரவேலு B. A., B. L.)

(III)

தென்னிந்தியாவில், ஜஸ்டிஸ் கட்சி ஓர் நவீன கட்சியாக தோன்றியுள்ளது. இது காலஞ்சென்ற தமிழ் நாட்டு பெரியார்களாகிய Dr. நாயராலும், சர். பி. தியாகராய செட்டியாராலும் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த கட்சியின் செல்வாக்கு தென்னிந்தியாமட்டோ இருந்து, பிறகு பம்பாய் முதலிய மேல்பாகங்களிலும் பரவியுள்ளது. இதன் நோக்கம் முக்கியமாக என்னவெனில், பிராமணர்களுடைய அரசியல் செல்வாக்கில், தாங்களும் சமத்துவம் பெறவேண்டுமென்பதே. இந்த நோக்கையாரும் தேசிய நோக்காக எடுத்துக்கொள்ளார்கள். இது ஓர் சார்பினரின் நோக்கமென்றே மதிக்கப்படும். இந்தக் கட்சி காங்கிரஸ் கட்சிக்கு விரோதமாக நின்றபடியால், ஆட்சிபுரிந்து வரும் அதிகாரிகளிடம் நன்கு மதிக்கப்பட்டு வந்தது. இது இயல்பே. முதல்வர் அரசியல்கள் எல்லாம், தங்களை ஆதரிக்கும் கட்சிக்காரர்களை அவர்கள் ஏக தேசமாக தங்களுக்கு மாறாக பேசிய போதிலும், அவர்களை ஆதரிப்பது வழக்கம். அது போலவே, நமது மாகாண ஜஸ்டிஸ் கட்சியாரை பிரிட்டிஷ் ஆளுகையில், ஆதரித்து வந்தார்கள். இனியும் ஆதரித்து வருவார்கள். இதனை யார் தடுக்கக்கூடும்? ஜஸ்டிஸ் கட்சி நமது நாட்டு அரசியல் வளர்ச்சியில் தோன்றவேண்டியது அவசியமே. ஏனெனில், ஒரு கூட்டத்தவர்களே சரித்திர காரணங்களால் பிரிட்டிஷ் அரசியலில் செல்வாக்கு அடைந்து வந்தனர். அந்த செல்வாக்கை இதர கூட்டத்தார்களும் பெற முயற்சிப்பதில்தப்பிதமொன்றுமில்லை. ஆனால் இவ்வித பயன்கள் ஏதோ சிலருடைய செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் பெருகச் செய்யுமே ஒழிய பாமர ஜனங்களுக்கு யாதொரு பிரயோசனத்தைத் தந்திலது. இதற்குத் திருஷ்டாந்தம் இவ்விரு கட்சியின் சரித்திரமே போதும். பிராமண செல்வாக்கு மிகுந்த காலத்திலும் பிராமணர் அல்லாதார் செல்வாக்கு மிகுந்த தேசத்தில் வாழும் பொது மக்களுக்கு யாது பயனையும் தரவில்லை. அதிர்ஷ்டம் பெற்ற சிற்சிலரே மந்திரிப் பதவிபெறவும், பட்டம் பதவி பெறவும் ஆதிக்கம் பெற்றனர். சிலரே உத்தியோகம் பெற்றனர். பதவிப் பெறுவதாலும், பட்டம் பெறுவதாலும், தேசம் முன்னேற்றம் அடையாது. பாமர மக்கள் ஜீவனத்தையும் அதிகப்படுத்தாது. சில பிராமணர்களுக்கு பெரும் பதவி கிடைத்த காலத்திலும் அல்லது சில பிராமணரல்லாதாருக்கு, அல்லது சில மகமதியர்களுக்கு பதவி கிடைத்த காலத்திலும், பதவி அடைந்தவருக்கே லாபமேயொழிய பொது மக்களுக்குப் தோன்றுமில்லை. இனி வரப் போவதுமில்லை. ஆனால் முதலாளி அளிக்கக்கூடிய பட்டம் பதவிகளில், எல்லோரும் சமபாகமாக அனுபவிப்பது தருமமாகும். ஏன் பஞ்சமர்களிலாவது, தாழ்த்தப்பட்ட பள்ளி, பறை என்று கூறும் வர்ணத்தார்களிலாவது சிலர் பெரிய உத்தியோகப்பதவி பெறலாகாது? முதலாளிமேசையிலிருந்து விழும் துண்டுகளை எல்லாக்கட்சிகளிலுள்ள சிலராகிலும் ஏன் அனுபவிக்கக் கூடாது? ஆனால், அதனால் தேசத்திற்கு ஒரு நன்மையு உண்டாகா. பட்டம் பதவி பெற்றவர் குடும்பங்கள் செல்வாக்குப் பெற முடியுமேயொழிய, பொது மக்களுக்கு யாதும் பிரயோசனமில்லை. முதலாளி திட்டத்தில் சகலருக்கும் சமத்துவமாக செல்வாக்குப் பெற முடியாதாகையால், யூகமும், தந்திரமும் பெற்ற சிலரே சகல சம்பத்தை அடைய முடியும். இந்த நிலைமையில் பாக்கியம் பெறாத சிலரை பாதுகாக்க வேண்டிய அவசியம் எந்த அரசியலிலும் நேரிடும். இந்த அவசியத்தால் தான் தாழ்த்தப்பட்டவர்களும் சிறுபான்மை யோரும் தனித்தொகுதி தங்களுக்கு வேண்டியது எனக்கேட்பது தனி காப்பு வேண்டுமெனவும் மன்றாடுவதும் இந்த சந்தர்ப்பத்தால் தானென அறிக. நமது தென்னிந்தியாவில் பிராமணரல்லாதார் தங்களுக்கு உத்தியோகத்திலும், கல்வியிலும், பிரதிநிதித்துவத்திலும் சிற்சில அனுகூலங்கள் (facilities) தற்காப்புகள் (safeguards) சலுகைகள் (preferences) தனிப்பட ஒதுக்கிவைக்க வேண்டுமெனக் கேட்பதும் ஞாயமேயானாலும், பொது நன்மைக்கு இவை உதவா. தற்கால அரசியல் திட்டத்தில் தந்திரசாலிக்குத்தான் எல்லா சுக போகமும். ஆதலின் இதில் இளைத்தவர்களுக்கு ஓர்வித காப்பு இருத்தல் அவசியம். இது நிற்க, சிறுபான்மை யோருக்கு தேர்தலில் (Elections) சில தற்காப்புகள் வேண்டுமென்பதும் நியாயமே. இவ்வாறு செல்வாக்குடையவர்களாலும், பொருப்புடையவர்களாலும், ஆதிக்கம் பெற்றவர்களாலும், சிறுபான்மையோர் தோல்வி அடைவது நிச்சயம். இதனைத்தடுக்க வேண்டுமானால், சிறுபான்மையோருக்கு தேர்தலில் சிற்சில பாதுகாப்புகள் இருந்துதான் தீரவேண்டும்! அந்த விஷயமாக ஜஸ்டிஸ் கட்சி மன்றாடுவது போற்றத்தக்கதே. ஆனால் இந்த அவசர நோக்கை சாஸ்வதமாக எண்ணுவதுதான் தவறு. இந்த நோக்கத்தினால், பாமர மக்கள் வாழ்வு உயரவே உயரா. உலகில் படும்பாடெல்லாம்,வயிற்றுபாட்டுக்கே. இந்தப் பாட்டை 35 கோடி மாந்தர் பெறும் வரை தனித்தொகுதியும், தனிக்காப்பும், தனி அனுகூலமும், சிறுபான்மை யோருக்கு அளிக்கத்தான் வேண்டும். பொதுவுடைமைத் திட்டம் ஒன்றில் தான் எல்லாருடைய நன்மையும் சமத்துவமாகப் பார்க்கப்படுமாகையால் அந்த நிலமையில், சமூக வாழ்வுக்கு எந்த காப்பும், வசதிகளும், சலுகைகளும் யாருக்கும் வேண்டியதில்லை. அந்தக் காலம் வரும் வரை சிறிய சமூகங்களுக்கு காப்பும், சலுகையும்தேவை என்பதை எந்த பகுத்தறிவுடையோரும் மறுக்கமுடியாது. இந்த ஞாயம் இவ்விதமிருக்க ஏன் காந்தியாரும், காங்கிரஸ்காரர்களும் தீண்டாதாருக்கும், மகமதியர்களுக்கும் தனிப்பட்ட தேர்தலுக்கு வேண்டிய சுதந்திரத்தை தடுக்கின்றார்களோ அது விளங்கவில்லை. செல்வாக்கிலும், சமத்துவத்திலும் தாழ்ந்திருக்கும் இக்கவகுப்பாரை, அரசியல் சபைகளிலும், நிர்மாண சபைகளிலும் காப்பவர்கள் யார்? செல்வாக்கு நிறைந்த பிராமணர்களா காப்பார்கள்? அல்லது தொழிற்சாலை அதிகாரிகளா காப்பார்கள்? அல்லது ஜமீன்தார்களா காப்பார்கள்? அல்லது சிற்றரசர்களா காப்பார்கள்? அல்லது கோடானகோடி பண்ணை ஆட்களுடைய க்ஷேமத்தை அவர்களுடைய ஆண்டைகளாகாப்பார்கள்? தொழிற்சாலைகளில் வேலை செய்து வரும் 60 லட்சம் தொழிலாளிகளை அவர்கள் எஜமானர்களா காப்பாற்றுவார்கள்? இது காறும் இந்திய தொழிலாளரையும், விவசாயிகளையும், செல்வாக்கைப் பெற்ற பிராமணர்களும், பிராமணரல்லாதாரும், பணக்காரர்களும், வர்த்தகர்களும், லாயர்களும், ஜட்ஜுகளும், நிலச்சுவான்களும் காத்து வந்த லட்சணம், தேசமடைந்திருக்கும் பொருளாதார நிலைமை, வெட்ட வெளிச்சமாகவும், உலகம் பரிகாசம் செய்யும் நிலையில் இருக்கக்கண்டும், இனியும் இவர்கள் ஆதிக்கத்திலா பாமர மக்களை விடுவது? நமது 6 கோடி தாழ்த்தப்பட்டவர்களை நான் காப்பேன் என்று காந்தியார், சொல்லுவதும் ஆபாசமென்றே சொல்லவேண்டி வருகிறது. வருணாச்சிரம வாதியாகிய இவரை ஜாதி இல்லாதவர்களாகிய பஞ்சமர்கள் எப்படி நம்புவது! இவரை நம்பினாலும், இவரை நம்பினாலும், இவர் சகாக்களை எப்படி நம்புவது? தனது அகிம்சையைக் கையாளாத தனது சகாக்கள் தீண்டாமையை எவ்விதம் விட்டுவிடுவார்கள்? நிகழும் ஆட்சியில் மகமதியர்களையும் தீண்டாதவர்களையும், இன்னும் சில சிறுபான்மையோரையும், சாதி, மத, வைதீகத்தைத் தழுவும் காந்தியாரிடமும் அவர்கள் சகாக்களிடமும் ஒப்புவிப்பது நண்டை சுட்டு நரியை காவல் வைத்ததை ஒக்குமென அறிக.

ஏனெனில், இதுவரையில் ஜாதி, மத வைதீகத்தலைவர்களாகிய மிதவாதிகளும், பொருளாளிகளும், நிலச்சுவான்தார்களும் அரசவிசுவாசிகளும் (Loyalists) கோடான கோடி ஏழை மகமதியர்களுக்கும்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

சமதர்மப் போர்.

(தேசியத்துரோகி)

டில்லியில் உள்ள போலீஸ் சினியர் சூப்பரின்டெண்ட் அவர்கள் போலீஸ் இலாகாவில் பெண்களையும் சேர்க்க முயற்சி செய்கிறார். 'போலீஸ் உத்தியோகத்திற்குப்பெண்கள் தேவை' என விளம்பரங்களும் வெளியிட்டிருக்கிறார். இந்த நிகழ்ச்சியை நாம் பாராட்டுகிறோம். எதற்காகப்பெண் போலீஸ் தேவை என்று சொல்லுகிறார் என்பதைப்பற்றி நமக்குக்கவலையில்லை. ஆனால் இது பெண்களின் சமத்துவத்திற்கு ஏற்ற செய்கையாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

சென்னையில் சென்ற வருஷத்தில் கூடிய பெண்கள் மகாநாட்டில் பெண்களுக்குப்போலீஸ் உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டிருப்பதாக நமது ஞாபகம். டாக்டர். முத்துலட்சுமி அம்மாள் அவர்கள் கூட ஒரு சமயம் பெண்களுக்குப் போலீஸ் உத்தியோகம் வேண்டுமெனப்பேசியிருப்பதாக நினைக்கிறோம். பெண்மக்களும் ஆண்மக்களைப்போல் சம உரிமைபெறவேண்டும் என்று சொல்லுகின்ற ஆண் பெண்கள் அனைவரும் டில்லி போலீஸ் சூப்பரின்டெண்டின் யோசனையை வரவேற்பார்களென்று நம்புகின்றோம்.

சட்ட மறுப்பு இயக்கத்தில் கலந்துகொண்டிருக்கும் பெண்களைப்போலீசார் இம்சிப்பதைப்பற்றி சீர்திருத்தமுள்ள பெண்களெல்லாம், சமத்துவம் வேண்டுகின்ற பெண்களெல்லாம், ஆத்திரப்படுகின்றார்களாம். ஆனால் இது எதற்கு என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. சட்டமறுப்பில் கலந்துகொண்டு மறியல்—ஊர்வலம் முதலியவைகளை நடத்துகின்ற ஆண் மக்கள் போலீசாரால் அடிபடுகின்ற பொழுது பெண்களும் அடிபடுகின்றது நியாயந்தானே! ஆண்மக்கள் தண்டனையடைகின்றபொழுது பெண்மக்களும் தண்டனையடைய வேண்டியது முறைதானே! சுகத்தில் மாத்திரம் ஆண்களுக்குள்ள உரிமைகள் எல்லாம் பெண்களுக்கும் வேண்டும்; கஷ்டத்தில் மாத்திரம் பெண்களுக்குப்பங்கும் சமத்துவமும் வேண்டாமென்றால் யார் கேட்பார்கள்? சர்தார் பட்டேல் சொல்லியபடி பிள்ளைகளைப் பெறுவதும், வளர்ப்பதுந்தான் பெண்கள் கடமை' என்பதை ஒப்புக்கொண்டு அவர்கள் சட்டமறுப்பில் கலந்து கொள்ளாமல் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்குவகையான பழக்க குணங்களுடன் வீட்டிற்குள்ளேயே இருந்தால் அவர்களை யார் என்ன செய்யப்போகிறார்கள்?

ஆனால் ஆண்மக்களை ஆண் போலீசார தடுக்கிறார்கள். பெண்களைத்தடுக்கப் பெண் போலீசார் இல்லை. ஆண் போலீசார்தான் அவர்களை தடுக்கிறார்கள். ஆகையால் பெண் போலீசாரை நியமித்துவிட்டால் இந்த வித்தியாசமும் ஒழிந்துபோகிறது. ஆகையால் பெண்போலீசார நியமிப்பதை நம் மனப்பூர்வமாய் பாராட்டுகிறோம். அன்றியும் விபசாரத்தடைச்சட்டம் அமுலுக்கு வந்திருக்கும் இச்சமயத்தில் பெண் போலீசார் ஏற்படுவது சீர்திருத்தவேலைக்கும் சாதகமாகுமென்று சந்தோஷப்படுகின்றோம். ஆகையால் பெண் போலீசாரை ஏற்படுத்துவது எப்பொழுதும் நிலையாக இருந்துவரச் சீர்திருத்த வாதிகள் முயலவேண்டும்.

II

பிப்ரவரி 4-ந்தேதி கூடும் இந்திய சட்டசபைக்கூட்டத்தில் பல சமூக சீர்திருத்த மசோதாக்கள் கொண்டுவரப்படுகின்றனவாம். அவைகளில் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்களால் கொண்டுவரப்படும் தீண்டாதவர்களுக்கு இருந்துவரும் அசௌகரியங்களைப்போக்கும் மசோதாவும், தேவதாசிமுறையை ஒழிக்கும் மசோதாவும் முக்கியமானவையாகும். இதில்தான் இந்திய சட்டசபையின் யோக்கியதை விளங்கப்போகிறது. ஜாதி இந்துக்கள் ஏழைத்தீண்டாதவர்களின் நன்மையை எவ்வளவு தூரம் கவனிக்கின்றவர்களாயிருக்கின்றார்கள் என்பது வெட்டவெளியாகிவிடும். காங்கிரசும், மற்றவைதீகர்களும், ஜாதி இந்துக்களும், தீண்டாதவர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் வேண்டுவதில்லை என்று சொல்லித்தீண்டாதவர்களின் கோரிக்கையை மறுத்ததின் சூழ்ச்சி விளங்கும். 'தேவதாசி முறை மதசம்பந்தமானது அது ஒழிந்துவிட்டால் இந்து மதத்திற்கு ஆபத்து' என்று சொல்லுகின்ற கூட்டத்தார் இந்தியா சட்டசபையில் எத்தனை பேர் இருக்கின்றனர் என்பதும் வெளிப்படும். இப்பொழுது சட்டசபையில் திரு. எம். கே. ஆச்சாரியார், பண்டிதமாளவியா, போன்றவர்கள் இல்லையென்றாலும் திரு. ராஜா பகதூர் கிருஷ்ணமாச்சாரியாரும், அவர் கூட்டத்தைச்சேர்ந்த சிலரும் இருக்கின்றார்கள் என்பது நேயர்களுக்குத்தெரியும். இவர்கள் எதிர்க்காமல் இருக்கமாட்டார்கள். ஆனால் அரசாங்கத்தார் வைதீகர் பக்கம் சேருவார்களா? அல்லது நமது சுயமரியாதைத்தலைவர் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் பக்கம் சேருகின்றார்களா? என்பது நமக்கு இன்னும் விளங்கவில்லை.

இந்த சட்டசபைக்கூட்டத்தில் மற்றொரு நாடியும் வருகிறது. ஒரே நாடி பல உருவமாக வருகிறதாம். அதாவது சாரதா சட்டத்தை எடுத்துவிடவேண்டும் என்றும், திருத்தவேண்டுமென்றும் பல மசோதாக்கள் வருகின்றனவாம். இந்தமாதிரியான மசோதாக்களைப்பல இந்துக்கள் கொண்டுவருகிறார்களாம். ஒரு முஸ்லீம் கூட இத்தகைய மசோதா ஒன்று கொண்டுவருகிறாராம் இதுதான் ஆச்சரியமானசேதி. குழந்தைகளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள ஆசைப்படும் கிழவர்களின் 'அதிர்ஷ்டம்' எப்படி இருக்கிறதோ தெரியவில்லை.

சாரதா சட்டத்தை ஆட்சேபித்தும் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்களின் மசோதாக்களைக்கண்டித்தும், நாடெங்கும் உள்ள வைதீகர்கள் தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். 'நாங்கள் ஒற்றுமையடைந்து விட்டோம். சீர்திருத்தம் பெற்றுவிட்டோம். ஆகையால் முழுசுயராஜ்யம் வேண்டும்' என்று சொல்லும் காங்கிரஸ்காரர்களின் உண்மைப்பேச்சு இச்சமயம் விளங்கிவிடும். ஆகையால் இந்த மசோதாக்களின் கதி என்னவாகிறதென்பதைக் கவனித்துக்கொண்டிருப்போம்.

III

திரு. காந்தியவர்கள், தாம்ஜெயிலுக்குப்போகுமுன்பு, ஆலயப்பிரவேசசத்தியாக்கிரகத்தைப் பற்றி, தமது "யங் இந்தியாவில்" ஒருகட்டுரை வெளியிட்டிருந்தார். அக்கட்டுரையில் "ஆலயப்பிரவேச சத்தியாக்கிரகஞ்செய்ய நினைப்பவர்களுக்கு, ஆலயத்தின்மேல் நம்பிக்கை ஏற்படவேண்டியது அவசியமாகும். ஆலயத்தில் நம்பிக்கையற்றவர்கள் சத்தியாக்கிரகஞ்செய்ய நினைப்பது தவறு. ஆலயப்பிரவேசம் ஒருமதவுரிமை. ஆகையால் இந்துக்களின் கோயில்களில் இந்துக்கள் அல்லாதவர்கள் பிரவேசிக்கமுயற்சிப்பது தவறு. இந்தசத்தியாக்கிரகத்தில் இந்துக்கள் அல்லாதவர்கள் வெளியிலிருந்துகொண்டு உதவிபுரியலாமேதவிர கலந்துகொள்ளக் கூடாது" என்ற அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன.

ஆகவே சுயமரியாதைக்காரர்கள் இந்தஅபிப்பிராயத்தை எப்படிஒப்புக்கொள்ளமுடியும்? இந்த அபிப்பிராயத்தைஒப்புக்கொண்டு சத்தியாக்கிரகம் பண்ணுகிறவர்களுடன் எப்படிக்கலந்துகொள்ளமுடியும்? நாம், கோவில்களொழிய வேண்டுமென்று சொல்லுகிறோம். இப்படிச்சொல்லுகிறநாம், எப்படிக்கோவில்கள் மேல்நம்பிக்கை கொள்ள முடியும்? ஆகையால்தற்போது காங்கிரஸ்காரர்களால், காங்கிரஸ்காரர்களின் ஆதரவுபெற்றவர்களால் நடத்தப்படும் ஆலயப்பிரவேசசத்தியாக்கிரகம் மதப்பற்றுகொண்டவர்களாலேயேநடத்தப்படுகிறதென்றுதெரிந்து கொள்ளலாம். ஆகையால்தான் மதநம்பிக்கை கொண்டவர்களால், மதத்தை அழியாமல்காப்பாற்றுவதற்காகச் செய்யப்படும்சத்தியாக்கிரகங்களில் சுயமரியாதைக்காரர்கள் கலக்கவில்லை. அப்படிக்கலந்து கொள்ளுவதும் தவறென்று அபிப்பிராயப்படுகிறோம்.

IV

திரு. காந்தி அவர்கள், "சட்டசபைத்தீர்மானங்கள் குடிஅரசின்தத்துவப்படி பொதுஜனங்களின் அபிப்பிராயத்தைச் சார்ந்ததாகவே யிருக்கும். ஆகையால் பொதுஜனஅபிப்பிராயத்தை வளர்க்கவேண்டுமானால், தருக்கமுறையில் நடத்தப்படும் உண்மையான சத்தியாக்கிரகத்தைத்தவிர வேறு வழியில்லை" என்றுஅபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். பொதுஜனஅபிப்பிராயப்படி தான் சட்டசபையில் சட்டங்கள் ஏற்படுத்தமுடியுமென்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால்பொதுஜன அபிப்பிராயத்தை வளர்க்கச் சத்தியாக்கிரகந்தான் சரியானவழி யென்றுசொல்லுவதுதவறாகும். சத்தியாக்கிரகஞ்செய்தால், எதிரிகள்இன்னும் பலமாகஎதிர்த்து நிற்பார்களேயொழிய சாந்தமாக மனந்திரும்ப மாட்டார்கள். சத்தியாக்கிரகம்என்பது அஹிம்சையாகாது. ஒருவருடைய காரியங்களைத்தடுப்பது எப்படிஅஹிம்சையாகும்? ஒருவருடைய காரியங்களை நடைபெறவொட்டாமல் எந்தவகையில் தடுத்தாலும் அது ஹிம்சையேயாகும். ஆகையால், சத்தியாக்கிரகத்தால் எதிர்க்கட்சியின் கொள்கை உறுதிப்பட்டு அவர்கள் இன்னும் பலமாக எதிர்த்துத்தான் நிற்பார்கள், ஆகையால் பிரசாரத்தாலும், பத்திரிகைகளாலும் தான் பொது ஜனங்களைத் திருப்ப முடியும். ஸ்பெயின் டர்க்கி, ரஷ்யா, பிரான்சு முதலிய தேசங்களில் நடந்த சீர்திருத்தப்புரட்சிகளுக்குச் சாதகமாகப் பொது ஜனங்களின் மனந்திரும்பியது, பத்திரிகைகளாலும், தலைவர்களின் பிரசாரத்தாலுமே ஒழிய சத்தியாக்கிரகத்தால் அல்ல என்பது திரு. காந்தியவர்களுக்குத் தெரியாததல்ல. ஆகையால் பிரசாரத்தின் மூலம் பொது ஜனங்களின் மனத்தைத்திருப்பிச் சட்டசபைகளின் சமதர்மச் சட்டங்கள் செய்து சமதர்மத்தை நிலைநிறுத்துவதே கைகூடும் மார்க்கம் என்று நாம் சொல்லுகிறோம்.

கொளுமடு.

ஆதிதிராவிட குல அபிவிருத்தி சங்கம்:—

இவ்வூரிலுள்ள திருநெல்வேலி ஜில்லா, இராமநாதபுரம் டிவிஷன் ஆதிதிராவிட குல அபிவிருத்தி சங்கத்தின் ஆதரவில் 11-1-32ந்தேதி திரு. எஸ். ஆர். முத்தையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர். பின் திருவாளர்கள் அருண நாயகம் ஏ. இராகவன், எஸ். எம். சாமி எஸ். எஸ். பெரியசாமி ஆகியவர்கள் பேசினார்கள் பின் பி. கா. சுப்பையா சுயமரியாதைக் கீதம் பாடினார். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

பண்டிதர் புரட்டு.

(சாமி சிதம்பரனார்.)

தமிழ் மொழியிலே மிகச்சிறந்த நூலாக விளங்குவது திருக்குறள். இந்நூலைப் பற்றிப்போற்றாத புலவர்கள் யாருமிலர். இந்நூலின் ஆசிரியராகிய திருவள்ளுவரைப்பற்றிப் புகழாதவர் எவருமிலர். இவரைத்தெய்வமாகவே எண்ணி அநேகர் வழிபடுகின்றனர். இவருக்கென மயிலாப்பூரில் கோயிலும் கட்டிப் பூசையும் புரிந்துவருகின்றனர். இவர் ஒரு பெரிய சிவபக்தராக இருந்தார் என்று நினைக்கும்படி 'திருவள்ளுவநாயனார்' என 'வள்ளுவர்' என்னும் பெயருக்கு முன்னும் பின்னும் அடைமொழியும் சேர்த்துவிட்டனர்.

ஆனால் திருக்குறள் என்னும் நூலை இயற்றிய புலவரின் உண்மையான சரித்திரம் இன்னதென ஆதாரத்துடன் யாராலும் கூறப்படமுடியவில்லை. நமது நாட்டில் எந்தப்புலவர்களுடைய உண்மையான சரித்திரமும் வெளிப்படவில்லை. ஆனால் ஒவ்வொரு புலவரைப்பற்றியும் கதைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அந்தக்கதைகளின் மூலம் அப்புலவர்களின்மேல் அநேக தெய்வீக சக்திகளை ஏற்றப்பட்டிருக்கின்றன. இயற்கையில் நடக்க முடியாத விஷயங்களையும் மனிதத்தன்மைக்கு மாறான விஷயங்களையும் புலவர்கள் தலைமேல் சுமத்தியிருக்கிறார்கள். இவையெல்லாம் அப்புலவர்களைப்பெருமைப்படுத்தவேண்டும் என்னும் நோக்கத்தோடு செய்யப்பட்டதே யொழிய வேறில்லை.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கற்பனைக்கதைகளின் நோக்கம் தெய்வீக சக்தியை மக்கள் மனத்தில் பதியச்செய்வதேயாகும். ஆயினும் இக்கற்பனைக்கதைகளில் சில நல்ல படிப்பினையைத்தரக்கூடிய விஷயங்களும் அடங்கிக்கிடக்கின்றன. இவ்விஷயங்களை, இக்கதைகளை உண்மையென்று நம்பி பக்தி செலுத்தும் வைதீகப்புலவர்கள் சிந்தித்துப்பார்ப்பதில்லை. சிந்தித்துப்பார்த்தாலும் அதை ஒப்புக்கொள்ளுவதில்லை. ஒப்புக்கொண்டாலும் அனுஷ்டானத்தில் கொண்டுவருவதில்லை.

உதாரணமாகத் திருவள்ளுவருடைய பிறப்பு வளர்ப்புக்கதையைக் கவனிப்போம். 'தமிழ் நாட்டில் பகவன் என்னும் ஒரு பார்ப்பனர் இருந்தார். அவர் ஆதியென்னும் ஒரு பறைப்பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டார். அவர்கள் தமக்குப்பிறக்கும் குழந்தைகளை அப்படியே போட்டுவிடவேண்டும் என்று நிபந்தனை ஏற்படுத்திக்கொண்டார்கள். அந்தமாதிரியே இருவரும் ஸ்தலயாத்திரை செய்துகொண்டு வரும்போது அவர்களுக்குப்பிறந்த குழந்தைகளை அந்தந்த இடத்திலேயே போட்டுவிட்டுப்போய்விட்டார்கள். இம்மாதிரி ஏழு பிள்ளைகள் பிறந்தார்கள். இவர்களில் கடைசியாகப்பிறந்தவர் திருவள்ளுவர். அவரை மயிலாப்பூரில் ஒரு இலுப்பைதோப்பில் பெற்றுப்போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். அக்குழந்தையை ஒருவள்ளுவன் எடுத்து வளர்த்துவந்தான். அதனால் அவருக்கு வள்ளுவர் என்று பெயர்வந்தது. பிறகு அவர் கல்வி கற்று வல்லவரானபின் ஒரு வேளாளன் பெண்ணாகிய வாசுகி என்பவளை மணந்துகொண்டு நெசவுத்தொழில் செய்து வாழ்ந்தார்' என்பது கதை. இதில் உள்ள சில சூழ்ச்சிகளைக்கவனிப்போம்.

பகவன் என்னும் பிராமணனுக்கும் ஆதியென்னும் பறைச்சிக்கும் பிறந்ததாக ஏற்படுத்தப்பட்டது பார்ப்பனச்சூழ்ச்சி. பார்ப்பனர்களைத் தவிர வேறுயாருக்கும் புத்தியில்லை, பார்ப்பனருக்குத்தான் புத்தியுண்டு என்பது அவர்கள் கொண்டிருக்கும் கர்வமான எண்ணம். ஆகையால் எந்தப்புலவரையும்பிராமணராகவோ, அல்லது பிராமண சம்பந்தம் பெற்றவராகவோ கற்பித்துக்கதையெழுதுவது வழக்கம். அதன்படி திருவள்ளுவரை ஒரு பார்ப்பனரல்லாதார் என்று ஒப்புக்கொள்ள சம்மதியாமல் அவரைப்பார்ப்பனருக்குப் பிறந்தவர் என்று ஏற்படுத்திவிட்டார்கள்

பார்ப்பான் பறைச்சியைக் கலியாணம் பண்ணிக்கொண்டதில் அவர்களுக்கு ஒன்றும் இழிவில்லை. அது அவர்களுடைய சாஸ்திர சம்மதமேயாகும். பார்ப்பான் தனக்குக்கீழ்ப்பட்ட எந்தச்சாதியிலும் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று ஸ்மிருதிகள் சொல்லுகின்றன. அன்றியும் படித்தவர்களுக்கும் அழகுள்ள பெண்களுக்கும் ஜாதி வித்தியாசம் இல்லை' என்பதற்குச்சாஸ்திரப் பிரமாணங்கள் உண்டு. ஆகையால் இந்தக்கதையின்படி பிராமணர்களுக்கு அபவாதம் இல்லை.

இதில் மற்றொரு சூழ்ச்சி இருப்பதை நாம் அறியவேண்டும். பார்ப்பான் தனது சொந்த ஜாதியில் கல்யாணம் பண்ணிக்கொண்ட பெண்ணையும் அவனுக்குப்பிறக்கும் பிள்ளைகளையும் காப்பாற்றக்கடமைப்பட்டவன். மற்ற ஜாதிகளில் மணம் புரிந்துகொண்டால் அக்கடமையில்லை என்பதற்கும் அவர்கள் ஸ்மிருதிகளில் பிரமாணங்கள் இருக்கின்றன இதை ஒட்டித்தான் பகவன் ஆதிக்குப் பிறந்தபிள்ளைகளை யெல்லாம் அப்படியப்படியே போட்டுவிட்டான். இதிலிருந்து பகவன் ஒரு காமங்கொண்ட துன்மார்க்கப்பார்ப்பான் என்பதை அறியலாம். ஏனென்றால் ஆதியென்னும் பறைச்சியைத்தனது காம உணர்ச்சியைத் தீர்த்துக்கொள்ள மாத்திரம் உபயோகித்துக்கொண்டானே யொழிய வேறு அவளோடு கூடி இல்வாழ்க்கை நடத்தியதாகச் சரித்திரமில்லை. ஆகையால் பார்ப்பனர்கள் சீர்திருத்தம் பேசுவதும், அதைச்செய்வதாக நடிப்பதும் தங்கள் சுயநலத்திற்காகவே தவிர வேறில்லையென்பதை உணரலாம்.

அடுத்தபடியாக திருவள்ளுவர், ஒரு வேளாளப் பெண்ணை மணந்துகொண்டார் என்னும் கதைகவனிக்கத்தக்கது. திருவள்ளுவரை அக்காலத்தில் வள்ளுவர் என்றே எல்லோரும் எண்ணிவந்தாரே ஒழிய, ஒருவரும் அவரை பார்ப்பனருக்குப் பிறந்தவராக அறிந்திருந்ததாகக் கதையிற் சொல்லப்படவில்லை. இப்படியிருந்தும், ஒருவள்ளுவருக்கு ஒருவேளாளன் பெண்ணைக் கொடுத்ததாக எழுதியிருப்பதிலிருந்து தமிழ் நாட்டுவழக்கம் ஒன்றுதெரிகிறது. சாதிபேதம் பாராட்டாமல் தாராளமாகக்கலப்பு மணம் நடைபெற்று வந்ததென்று அறிந்து கொள்ளலாம். தற்காலத்தில் இருப்பதுபோல் பிறப்புச்சாதி வேற்றுமை அக்காலத்தில் இல்லை யென்று உணரலாம்.

ஆகையால் திருவள்ளுவர் பிறப்புக்கதையைப்பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கின்ற-அதைஉண்மையாக நம்பிக்கொண்டிருக்கின்ற எந்தப்புலவரும் அதில் உள்ள நிபேதமில்லாத்தன்மையையும் கலப்புமணத்தன்மைகளையும் கொஞ்சங்கூட நினைத்துப் பார்ப்பதில்லை. இந்தக்கதையை உண்மையென்று நம்புகின்ற பண்டிதர்கள், ஜாதிவேற்றுமை போகவேண்டுமென்று சொல்லுகின்ற சுயமரியாதைக்காரரை ஏன்வெறுக்க வேண்டும்?

உண்மையிலேயே பண்டைக்காலத்தில் நடைபெற்ற அனேக வழக்கங்களை, சாஸ்திரசம்மந்தமாக உள்ள அநேககாரியங்களைச்செய்கையில் நடத்தவேண்டும்; அதனால் மக்களுக்கு நன்மையுண்டு என்று சொல்லுகின்ற சுயமரியாதைக்காரர்கள் அயோக்கியர்களா? அல்லது கதைகளை ஒப்புக்கொண்டு, படித்துக்கொண்டு, உண்மையென்று வேஷபக்திசெலுத்திக்கொண்டு அதன்படி நடக்காதிருக்கின்ற பண்டிதர்களும், சாஸ்திரிகளும், மதவாதிகளும், வைதீகர்களும், அயோக்கியர்களா? என்று யோசித்துப்பாருங்கள்!

சாஸ்திரங்களை அழிக்கவேண்டுமென்றுசொல்லுகிறார்கள்மதங்களை அழிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள், கடவுள் இல்லை யென்றுசொல்லுகிறார்கள்; ஆகையால் சுயமரியாதைக்காரர்கள் நாஸ்திகர்கள், அயோக்கியர்கள், என்று வீணாகப்பேசுவதில் ஒன்றும் பயனில்லை. சாஸ்திரிகளை நம்பிக்கொண்டிருக்குன்ற வைதீகர்கள் என்ன செய்கிறார்கள்? மதங்களை நம்புகின்ற பண்டிதர்கள் என்னபண்ணுகின்றார்கள்? கடவுளைநம்புகின்ற பக்தர்கள் என்னசெய்கிறார்கள்?

"அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டு விட்டால். இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே" என்று தாயுமானவர் கூறினாரே? அதாவது உலகில் உள்ள அன்பர்களாகியமக்களுக்கு ஊழியஞ்செய்ய என்னை ஆளாக்கினால், இன்பநிலை என்னும் மோட்சம் தானாகவே கிடைக்கும் என்று சொன்னதாயுமானவரும் ஒரு பக்தர்தானே! வைதீகர்தானே! அவர்பாடலைப் படிக்கின்ற எந்தப்பண்டிதர், வைதீகர், பக்தர் அம்மாதிரி நடக்கின்றார்கள்? எல்லாப்பண்டிதர்களும், வைதீகர்களும், பக்தர்களும் தங்கள் சுயநலத்திற்குப் பணிசெய்யத்தயாராயிருக்கின்றார்களே யொழிய பிறர்நலத்திற்குப் பணிசெய்யமுன்வருகிறார்களா? மதத்துவேஷத்தினாலும், ஜாதி இறுமாப்பினாலும், பிறரை இழிவாகவும் தம்மை உயர்வாகவும் மதிக்கும் மனப்பான்மை இருக்குமளவிலும் அன்பர்பணி செய்வதெங்கே? இன்பநிலைஎய்துவதெப்படி? பிறருக்கு அழகாகப் பாடிக்காட்டலாம். அர்த்தஞ் சொல்லிக்காட்டலாம், இதிலென்னபயன்? ஆகையால்தான் இந்தமாதிரி சோம்பேரிகளுக்குப் பிழைப்புக்குவழியாக இருக்கிறநூல்களையும், கதைகளையும் ஒழிக்கவேண்டுமென்கிறோம்.

—

டெல்லி பெண் போலீஸ்.

ஒரு சிறு பெண் போலீஸ் படை அதாவது 10 பெண் போலீஸ்காரர்களும் 1 ஹெட்போலீஸ் காரியும் கொண்டது. முதல்தேதியிலிருந்து ஏற்படுத்தப்படுமென்று தெரிகிறது. போலீஸ் ஸ்டேஷனில் விசாரித்ததில் இதுவரையில் டி உத்தியோகங்களுக்காக 50 மனுக்கள் வரையில் வந்து சேர்ந்திருப்பதாகத்தெரிகிறது. அவைகளில் ஆங்கிலோ, இந்தியர்கள், ஹிந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் முதலியவர்கள் அடங்கியிருப்பதாகவும் தெரிகிறது. சூப்பிரண்டெண்டென் அவைகளைப் பார்த்து பொறுக்கி எடுத்துக்கொண்டிருக்கிறார். அது திங்கட்கிழமைக்குள் முடிந்துவிடுமென்று தோன்றுகிறது. இருந்த போதிலும் டெல்லி அஜின்லஸி ஆபிஸி என்னும் ஆங்கிலோ இந்தியப்பெண்தான், அந்தப் பெண் போலீஸ்படையை தலைமை வகித்துநடத்துவார் என்பது நமக்குத் தகுந்த இடத்திலிருந்து தெரியவருகிறது. இந்தப்பெண்போலீசுக்கு ஒரு தனி இடமும் ஒதுக்கப்பட்டாகிவிட்டதென்றும் தெரியவருகிறது. உடையைப்பற்றியும் தேகப்பயிற்சி முதலியவைகளைப்பற்றியும் நன்கு யோசிக்கப்பட்டு வருகிறது. இந்தபெண் போலீஸ்படை மறியல் செய்யும் பெண்களையும் மதசட்டவிரோதமாக குற்றம் செய்யும் பெண்களையும் அடக்குவதற்கும் கைது செய்வதற்குமேதான்.

அதிர் வெடிகள்.

(பைத்திய கிழித்தவை)

சர். பாத்ரோ.

சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் [illegible]புரியில் சர்க்கியூட் மண்டபத்தில் ஜனக்கட்சியின் முன்னிலையில் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் 'கிராமாந்தரங்களில் நாம் வேலை செய்யவேண்டிய காலம் வந்து விட்டது. விவசாயிகளையும் தொழிலாளர்களையும் தட்டியெழுப்பி அவர்களுடைய ஆதரவைப்பெறுவதிலேயே நமது சக்தி அடங்கியிருக்கிறது. எந்தக் கட்சியாருக்கும் பயப்படாமலும் சர்க்கார் என்ன செய்யப்போகிறார் என்று காத்துக்கொண்டிராமலும் நாம் தைரியமாக வேலை செய்ய முன்வரவேண்டும். நாம் இப்பொழுது ஒரு தேசபாஷைப்பத்திரிகை தொடங்க வேண்டும். வட்டமேஜை மகாநாட்டுக்கமிட்டிகளுடன் ஒத்துழைத்து ஐக்கிய அரசியல் திட்டத்தை விரைவில் ஏற்படுத்த உதவி புரியவேண்டும். ஆனால் இதற்கு செகுகாலம் பிடிக்கும். ஆகையால் ஐக்கிய அரசியல் திட்டம் தயாராகும் வரையிலும் மாகாண சுய ஆட்சியும் மத்திய சர்க்காரில் சிலமாறுதலும் போதுமானதென்று நான் நினைக்கிறேன். இந்தசமயத்தில் சர்க்காரோடு ஒத்துழைத்து சட்டத்தையும் சமாதானத்தையும் பரிபாலனம் செய்ய உதவிபுரிய வேண்டியது மிகமுக்கியமாகும்' என்றுபேசியிருக்கிறார்.

திரு. பாத்ரோ அவர்கள் கூறும் யோசனை சரியானதென்பதை எந்த உண்மைத்தேசாபிமானியும் ஒப்புக்கொள்ளமுடியாது. விவசாயிகளும் தொழிலாளர்களும் விழிப்படைந்தால் ஒழிய பிரயோஜனமில்லை. காங்கிரஸ் திட்டமான சுயராஜ்யத்தில் ஏழை விவசாயிகளின் நிலையும், தொழிலாளர்கள் நிலையும் எப்பொழுதும் போலத்தான் இருக்கும். அன்றியும் இப்பொழுது தேசம் இருக்கும் நெருக்கடியான நிலைமையில் பதவிமேல் பூனைகளாக இருக்கும் தேசாபிமான வேஷக்காரர்களைக்காட்டிலும் கோழைகள் யாருமிலர். ஆனால் ஜஸ்டிஸ் கட்சியைச்சேர்ந்த சர் பாத்ரோ அவர்கள் அக்கட்சியின் மற்ற தலைவர்கள் மௌனஞ்சாதித்துக்கொண்டிருக்கும்போது தமது அபிப்பிராயத்தை அச்சமின்றி வெளியிட்டதைப் பாராட்டுகிறோம்.

டாக்டர். முத்துவின் மாணிக்கம்.

சென்ற 16-1-32 டாக்டர் முத்து அவர்கள் சென்னை கிறிஸ்துவ வாலிபர் சங்கத்தின் ஆதரவில் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் 'மக்கள் எழுத்துவாசனையில்லாமலிருப்பதால் அவர்களுடைய வாழ்க்கை [illegible]மாகிப்போகிறது. நாட்டைப்பற்றிக்கொண்டிருக்கின்ற வறுமையானது மக்களின் அமைப்பு லட்சணத்தைக் கெடுக்கிறது. கோடிக்கணக்கானவர்களை ஜாதிக்கொடுமைகள் பிடித்துக்கொண்டிருக்கின்றன. வீடுகளில் கூட்டம் அதிகம். அங்கு சூரிய வெளிச்சம் இல்லாமல் இருட்டாகவேயிருக்கிறது. தங்கு[illegible]க்குக்கூட நல்ல காற்று கிடைக்காது. அங்குள்ள அசுத்தங்கள் மக்களின் சக்தியைக்குறைத்து நோய்களை வளர்த்துப் பரவச் செய்கிறது. குழந்தைகள் போதிய உணவின்றியும், கெட்ட உணவுகளை அருந்தியும் பள்ளிக்கூடம் செல்லுகிறார்கள். ஆதலால் அவர்களுடைய இரத்த நாடிகளில் அசக்தி ஏற்பட்டு அதுகாரணமாக நோய்களை அதனை எதிர்க்கும் சக்தியை இழந்து மாண்டு போகின்றனர்' என்று பேசியிருக்கின்றார்.

ஆகவே இப்பேச்சிலிருந்து நமது மக்களின் ஆரோக்கியமற்ற வாழ்வுக்குக் காரணம் வறுமையும் ஜாதிக்கொடுமையும் என்றே உரைக்கலாம். ஜாதிக்கொடுமையொழிந்தால் வறுமையொழியும். வறுமை ஜாதிக்கொடுமை இவை ஒழியவேண்டுமானால் மதநம்பிக்கைகள் ஒழியவேண்டும். நமது நாட்டில் உள்ள கோயில்கள் நகரங்களில் எவ்வளவு பெரிய இடங்களை அடைத்துக்கொண்டு இருக்கின்றன? அவைகளுக்காக எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றன? அவைகள் யாருக்குப்பயன்படுகின்றன? இவைகளையெல்லாம் ஏழை மக்களுக்குப்பயன் படும்படி செய்தால் அவர்கள் சௌக்கியமடையமாட்டார்களா? என்றுதான் நாம் கேட்கின்றோம்.

தோழர். சிங்காரவேலு, B.A.B.L.

"இனி வரும் சுயராஜ்யத்தில், தொழிலாளருக்கு வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கூடாதென்றும் பொதுவாகவே ஓட்டுரிமை வேண்டுமெனவும் வற்புறுத்தியதாக நமது தோழர் சிவராவ் பேசினார். ஆனால் இனி வரும் சுயராஜ்யத்தில் தொழிலாளருக்கு எஜமானராகப்போகிறவர்கள் முதலாளிகள் என்பதை மறந்தார் போலும். இது என்ன விபரீத புத்தி? எந்த பூர்ஷுவா அதாவது முதலாளி அரசிலாவது எந்த தொழிலாளிக்கு என்ன அங்கு பாத்தியதை, உரிமை பொதுப் பிரதிநிதித்துவத்தால் கிடைத்திருக்கிறது? என்று கேட்கின்றோம். தோற்று தோல்வியுற்ற ஆங்கில தொழிலாளருடைய நிலைமையை தோழர். சிவராவிடம் குறிப்பிட்டேன். அதற்கு அவர் நான் சொல்வது முற்றிலும் ஒழுங்கு என்றார். ஆனால் நமது சொல் ஒழுங்காயிருந்தால் அதனைப்பின் தொடர்ந்து ஏன் நடக்கலாகாது?" என்று "சண்டமாருதம்" பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

இதற்கு நாம் என்ன பதில் சொல்லுவது? தோழர் சிவராவ் அவர்கள் உண்மையிலேயே தொழிலாளியாக இருந்தால் அல்லவோ அவருக்குத் தொழிலாளிகளின் துன்பம் தெரியும்? மற்ற நாட்டுத் தொழிலாளிகளைக்காட்டிலும் நமது நாட்டுத் தொழிலாளர்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கும் போது எப்படி அவர்கள் பொதுத் தொகுதிகளில் வெற்றி பெற முடியும்? தொழிலாளிகள் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு முதலாளிகள் தான், அதாவது தோழர். சிவராவ் போன்றவர்கள் தான வெற்றி பெறக்கூடும். தொழிலாளர் பிரதிநிதிகளாக இருக்கும் முதலாளிகள் எப்படித் தொழிலாளிகளின் நன்மையைக் கவனிக்க முடியும்? முதலாளிகளுக்கும் பாதுகாப்பு அளித்துக் கொண்டு, தொழிலாளிகளுக்கும் சமத்துவம் அளிக்கவேண்டும் என்னும் மனப்பான்மையுடையவர்களுக்கும், வருணாசிரம தருமமும் அழியக்கூடாது தீண்டாமையும் போக வேண்டும் என்று சொல்லுகிறவர்களுக்கும் என்ன வித்தியாசம்? ஆகையால் தோழர் சிவராவ் அவர்கள், வட்ட மேஜை மகாநாட்டில் தொழிலாளர் பிரதிநிதியாக இருந்து செய்த வேலை, இங்கிலாந்தில், தொழிற் கட்சித் தலைவர் "ராம்சே மேக்டொனால்ட்" தொழிற் கட்சிக்கு எவ்வளவு வெற்றி சம்பாதித்துக் கொடுத்தாரோ அது போன்றதுதான் என்று நாம் சொல்லுகிறோம்.

திரு. ரஜா அலி.

"காங்கிரஸ் காரர் சட்ட மறுப்புத் தொடங்கியதற்கு நியாயமே இல்லை. ஆத்திர புத்தியால், குட்டித் தலைவர்களே, திரு. காந்திக்கு போர்க் கொடியை உயர்த்தும் நிர்ப்பந்தத்தை உண்டு பண்ணி விட்டனர்' என்று திரு. ரஜா அலி அவர்கள் ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறியிருக்கிறார்.

இந்த வார்த்தை முற்றும் உண்மையாகும். திரு. காந்தி அவர்கள், இங்கிலாந்திலிருந்து கொண்டு, இந்தியாவுக்கு அவசரப்பட வேண்டாம் அவசரப்பட வேண்டாம்" என்று தந்தி கொடுத்துக் கொண்டு தான் இருந்தார். ஆனால் இளைஞர்களின் இரத்தம் சும்மா இருக்குமா? எதாவது தடபுடல் செய்யவில்லை தானே அவர்கள் நோக்கம் சென்று கொண்டிருக்கும்? சுயமரியாதைக்காரர்களிலும் "ஏதாவது ஆர்ப்பாட்டம் பண்ணிக் கொண்டேயிருக்க வேண்டும்" என்று நினைக்கின்ற சில இளைஞர்கள் இல்லையா? அது போலத்தான் காங்கிரசிலும் இருக்கின்றனர். ஆனால் திரு. காந்தியவர்கள், தன் மனத்திற்குப் பிடிக்காத செய்கையைப் பின்பற்றிய இளைஞர்களின் செய்கைகளை மறுத்திருக்கலாம். அப்படிச் செய்ய அவர் முன் வராமைக்குக் காரண "அந்த இளைஞர்களால் பிறகு தேசத்துரோகி யென்று தூற்றப்படுவோம்" என்ற பயந்தான். மகாத்மா பட்டம் பறந்து விடும் என்ற அச்சந்தான் என்று நாம் சொல்லுகிறோம்.

திரு. ஏ. ரெங்கசாமி அய்யங்கார்.

இந்துப் பத்திராசிரியர், திரு. ஏ. ரெங்கசாமி அய்யங்கார் மிகவும் தந்திரசாலி. அவர் மிதவாதியா? அல்லது அமிதவாதியா? என்று தற்சமயம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகையால் நாம் அவரைக் கோழைவாதி என்று அழைக்கலாம் என்று நினைக்கிறோம். ஏனென்றால், வட்ட மேஜை மகாநாட்டுக் கமிட்டிகளுடன் ஒத்துழைக்க மறுத்து விட்டதாக வதந்தி. ஆனால் சட்ட மறுப்பிலும் சேரவில்லை பிறகு என்ன தான் செய்கிறார்? அரசியல் உலகத்தை விட்டு வெளியேறி விட்டாரா? என்பது புரியவில்லை. ஆகையால் அவர் தனது நிலைமை விளக்கி ஒரு அறிக்கை வெளியிடுவாரா?

ஜெசூட் திருச்சபைக்கு சாவு மணி.

ஸ்பெயின் குடி அரசுத் தலைவர் தீர்ப்பு.

ஸ்பெயின் ஜெசூட் திருச்சபையைக்கலைத்துவிட்டதாக ஸ்பெயின் குடிஅரசுத்தலைவர் ஜாமேலா இன்று ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறார்.

இந்தக்கட்டளை பிறப்பிக்கக் காரணம் பின்வருமாறு:—ஜனவரி 1-ந் தேதி ஸ்பெயின் கிறிஸ்துவத்திருச்சபை அதிகாரி ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டார். ஸ்பெயின் குடி அரசு அமைப்பை பரிசீலனை செய்து அந்த அறிக்கையில் வன்மையாக கண்டிக்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவ மத விரோதமான சட்டங்கள் விஷயத்தில் ஜனங்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்றும் அதில் விளக்கப்பட்டிருந்தது.

குடி அரசு ஸ்தாபன காலத்தில் கத்தோலிக்கர் மிக்க புத்திசாலித்தனமாக நடந்துகொண்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பொழுது குடி அரசு ஒழுங்கான முறையில் ஸ்தாபிக்கப்பட்டு விட்டதால் கிறிஸ்துவ உரிமைகளைப் பாதுகாக்க கிறிஸ்தவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் அதில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. குடி அரசுத்திட்டத்தின் ஒவ்வொரு பகுதியும நன்கு ஆராய்ந்து சர்க்கார் மதவிஷயங்களில் நியாயவிரோதமாய்த் தலையிடுவதாயும் சுட்டிகாட்டப்பட்டிருந்தது. திருச்சபை அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்ததுடன் எல்லாப்பாதிரிமாரும் அவ்வறிக்கையில் கையொப்பமும் செய்திருந்தார்கள். மதவிரோதமான சட்டங்களியற்றப்படுவதனால் அவைகளை எதிர்க்க கிறிஸ்தமதப் பற்றுடையவர்கள் எல்லாம் ஒற்றுமையாக முயற்சி செய்யவேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டிருந்தது.

"சண்டமாருதம்"

லாலுகுடி தீண்டப்படாத
கிறிஸ்தவர்கள் முதல் மகாநாடு.

திருச்சினுப்பள்ளி ஜில்லா லாலுகுடி தாலூக்கா தீண்டப்படாத கிறிஸ்துவர் முதல்மகாநாடு லாலுகுடி தாலூக்கா போர்டு ஹைஸ்கூல் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் நாளது ஜனவரி மாதம் 23-ந்தேதியன்று நடைபெற்றது. காலை 8-30 மணிக்கு தலைவர்கள் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து மகாநாட்டுப் பந்தலுக்கு பாண்டு வாத்திய கோஷத்துடன் அழைத்துச்செல்லப்பட்டார்கள். மகாநாட்டுப் பந்தல் அழகிய கொடிகளால் சிங்காரிக்கப்பட்டிருந்தது. திருவாளர்களான எஸ். எம். ஞானப்பிரகாசம் பி. ஏ., பி. எல்., ராவ்சாகிப் வி. ஐ. முனிசாமிபிள்ளை எம். எல். சி., மிஸஸ் நீலாவதி ராமசுப்பிரமணியம், கி. ஆ. பெ. விசுவநாதம், டி. வி. சோமசுந்தரம் பி. ஏ., பி. எல்., டி. பி. வேதாசலம் பி. ஏ., பி. எல்., எஸ். ஜே. ரத்தினசாமி எம். ஏ., பி. எல்., ஜேசுதாசன் பி. ஏ., பி. எல்., ஜே. ராமானுஜன் பி. ஏ., பி. எல்., திருச்சி நகரசபை கௌன்சிலர் எம். மதுரை. ரிட்டையர்டு டிப்டி கலெக்டர் ஆசீர்வாத நாடார் பி. ஏ., மிஸ்டர் எம். ஏ. அருணாசலம், மிஸஸ் எம். ஏ. அருணாசலம், திருச்சி பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கக்காரியதரிசி கே. என். வாசுதேவன், டி. ஆர். பாலகிருஷ்ணன், ச. ம. சி. பரமசிவன் பாலகிருஷ்ணன், 'விடுதலை' ஆசிரியர் சாமிநாதன் மகமதலி ஆகியவர்களும் திருச்சி சுயமரியாதை சங்க அங்கத்தினர்களும் திருச்சி பார்ப்பனரலலாத வாலிபர் சங்க அங்கத்தினர்களும், பல சுற்றுக் கிராமத்து மக்களும் உள்ளூரிலிருந்து பலரும சுமார் 1000ஜனங்கள கூடியிருந்தார்கள். மகாநாட்டுப் பந்தலில் ஒவ்வொரு தூண்களிலும் பல வாக்கியங்கள் அட்டைகளில் எழுதிக்கட்டப்பட்டிருந்தன. 9-30 மணிக்கு மகாநாடு ஆரம்பமானது. இரு சிறுமிகளால் "வேண்டாம் தீண்டாமையே" என்ற பாட்டு இனிமையாகப் பாடப்பட்டது. பின்னர் திருச்சி முனிசிபல் கௌனசிலர் திரு. எம். மதுரை அவர்களால் மிஸஸ் நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள் மகாநாடடைத்திறநது வைக்குமாறு பிரேரேபிக்கபபட்டது. பிறகு மிஸஸ் நீலாவதி ராமசுப்பிரமணியம அவர்கள் மகாநாட்டை திறந்துவைத்து பேசியதின்சாரம்.

திருமதி நீலாவதி சொற்பொழிவு.

அன்புமிக்க சகோதரர்களே! தீண்டப்படாத கிறிஸ்துவர்முதல் மகாநாட்டைததிறந்து வைககுமாறு விரும்பிய உங்களுக்கு வந்தனம். இப்பெரிய கூட்டத்தில் ஓர் அளவுகூட பெண்கள் வராதது சகோதரிகளே! என்றுகூட சொல்ல நாவெழாதபடி செய்துவிட்டது. முன்னேற்றம் வேண்டும் என்று சொல்லப்படுகிற எந்த இடத்திற்கும் உங்களது பெண்கள் வராவிடில் நீங்கள் விரும்புகிற எந்த உரிமையும் கிட்டுவது அருமையே தீண்டாமை என்ற ஒன்று நம்மைவிட்டு எவ்வளவு விரைவில் தொலைகிறதோ அவ்வளவு விரைவில் நாட்டுமக்களுக்கு பல நன்மைதானே வந்தடைவது நிச்சயம். தீண்டாமையை வைத்துக்கொண்டு எந்த நன்மையும் அடைய முயற்சிப்பதில் ஒரு பயனுமில்லை. 'தீண்டாமையே சுயராஜ்யத்திற்கு முட்டுக்கட்டை அதையொழிபபதே எனது முதல்வேலை' என்று கூறிய காந்தி அப்படியொரு வார்த்தை சொன்னேமோ, அதை எந்தவரை செய்தோம் என்றுகூட நினைத்துப் பார்க்கமுடியாதபடி ஆக்கபபட்டிருக்கிறோம். உருவத்தில் எந்த பேதமுமில்லாத மனித ஜாதியை நான்கு ஜாதி என்று சொல்லி அதை நாலாயிரமாக்கி மேலும் பல்கவிட்டுக் கொண்டிருப்பதானது மிகவும்வெறுக்கக்கூடியதாகும். ஜாதிக்கர்வத்தினால் மக்கள் படும் தொல்லை சகிக்கமுடியாததாகும். திமிர்படைத்த கூட்டத்தினரே தீண்டாமையைக் கையிலேந்தி நிற்கின்றனர் என்பதை நீங்களறியாததொன்றன்று.

இந்து மதத்தில் தான்கொடிய தீண்டாமை இருக்கிறதென்று சாஸ்திரம் எழுதப்பட்டு அனுஷ்டிக்கபபடுகின்றதென்று தெரிந்த எனக்கு அன்பே உருவாகக் கொண்ட கிருஸ்து மதத்திலும் இக்கொடிய தீண்டாமை அனுஷ்டிக்கப் படுகிறதா! என்று ஆச்சரியப் பட்டேன். சுயநலப் பார்ப்பனர்கள் உண்டாக்கிய கொடிய தீண்டாமையை கிருஸ்து மதத்தினரும் கைக் கொள்ளுவது மிக வெறுக்கக் கூடிய செயலாகும். தவிர கிருஸ்து மத வேதத்தின்படி தீண்டாமை என்றதொன்று அறவே இல்லை என்பது உலக மறிந்ததாகும். இந்நிலையில் கிருஸ்துவர்களிலும் தீண்டப் படாதவர் என்று ஒதுக்கி யிருப்பதானது அவர்களது பெருந்தன்மைக்குப் பங்கப்படுத்திக் கொண்டதாகும் என்பது எனது அபிப்பிராயமாகும். இந்து மதத்தில் பார்ப்பனர்கள் மற்றையோர்களை நசுக்கி தாங்கள் சுகமாக வாழக் கண்டுபிடித்ததான ஜாதியையும அதன் காரணமான தீண்டாமையையும், அன்பே உருக் கொண்ட கிருஸ்து நாதர் உபதேசங்களைப் பின் பற்றும் உண்மைக் கிருஸ்துவர்கள் கைக்கொள்ள மாட்டார்களென்பது மட்டும் நான் உறுதியாகக் கூற முடியும். தீண்டாமையின் பேரில் ஆசை இருக்குமாயின் நெருப்பு, எலக்டிரிக்ஸிடி, பாம்பு, தேள் முதலியவைகளிடத்தில் மட்டும் உபயோகித்துக் கொண்டிருக்கலாமன்றோ! உங்களால் தீண்டப்படாதவர்களெனச் சொல்லப் படுபவர்கள் தங்கள் கொடுக்கினால் கொட்டி நீங்கள் எப்பொழுதாவது அவஸ்தைப் பட்டதுண்டா? அவர்களுக்கு விஷப்பல் இருக்கிறதென்று பயப்படுகிறீர்களா? எனக்குத் தெரிந்தவரையில் தீண்டப் படாதவர்கள் நெருப்பு மாதிரி சுட மாட்டார்கள். மின்சார சக்தி மாதிரி நரம்புகளைப் பிடித்திழுத்து உங்களைக் கொன்று விட மாட்டார்களென்று உறுதி கூறுகிறேன். நீங்கள் தைரியமாக தீண்டலாம். பிறகுதான் மேலும தைரியம் உஙகளுக்குண்டாகி சுயராஜ்யமோ, மறற நீஙகள் விரும்புகிற எதுவோ கிடைக்கும. நாட்டிற்கு நன்மை செய்யத் தீண்டாமையென்று சொல்லி ஓடி ஒளிகிற கோழைகள் தேவையில்லை. அவர்கள் ஒழிநதே போகட்டும். தீண்டாமை இல்லாதவாறு செய்வது கஷ்டந்தான். அதற்கு உஙகள் ரத்தத்தைச் சிநதாமல் தீராது. உங்களது உடல் பொருள் ஆவியைத் தியாகம் செய்யாமல தீராது ஏன்? அவ்வளவு மோசமாக நாட்டிடை பரவிவிடப் பட்டிருக்கிறது. நாய், பன்றி அடைந்திருக்கும உரிமை இநதியாவில ஏழரை கோடிப் பேருககு இல்லை எனபதை உணருஙகள்.

சாதித்திமிர் கொண்ட சண்டாளர்களால அமிழ்த்தி வைக்கபபட்டிருக்கும் அருமைச் சகோதர சகோதரிகளே! தீண்டாதவர்கள் நகை போடக் கூடாது, பித்தளைப்பாத்திரம் உபயோகிக்கக் கூடாது, உடம்பைத் துணியால் மூடிக் கொள்ளலாகாது என்பன போன்ற கொடிய வழக்கம் அனுஷ்டிக்கப் படுவதை உணருகிறீர்களா? துணி போடக் கூடாத சட்டம் சாப்பிடக் கூடாத சட்டமாகி விடுமென்பதை உணருங்கள். பன்றி, நாய், குஷ்டரோகி போகும் தெருவில் ஆரோக்கியமுள்ள நீங்கள் போகக் கூடாதென்றும், அதுகடவுள் இட்ட கட்டளை என்றும் சொல்வதை எவ்வளவு நாள்கேட்டுக் கொண்டிருப்பது. அந்தக் கடவுளுக்கு மரியாதை வேறு செய்து கொண்டிருக்கிறீர்களே. அதற்கு அர்த்த மென்ன? பூரண விடுதலை என்றால் அது தீண்டாமை யொழிப்பு என்ற எல்லைக்கு அப்புறம் மறைந்து கிடக்கிற தென்பதை உணருங்கள். ஒரு கோடி பேர் ஏழரைக் கோடி பேரைப் பன்றிக்கும் கீழாக மதித்திருப்பதை உடைத் தெரியுங்கள். எதற்கும் தைரியத்தை ஆதாரமாகக் கொண்டு தீவிரமாக எதிர்த்துப் போராட முன் வாருங்கள். நிச்சயமாய்க் கோரிய பலன் கிடைக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த மகாநாட்டைத் திறந்து வைத்து சில விஷயங்களைச்சொல்ல சந்தர்ப்பமளித்த உங்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

வரவேற்புக் கழகத் தலைவர் எல். எஸ். ஆரோக்கியசாமி, அவர்கள் பிரசங்கம்.

நமது நிலை.

தாழ்த்தப் பட்ட மக்களாகிய நாமே, தமிழ்நாட்டின் பழங்குடி மக்களாவோம். நம்மை பிழைக்க வழியின்றி மத்திய ஆசியாவிலிருந்து, இந்தியாவுக்கு வந்த ஆரியர்கள், பற்பல சூழ்ச்சி செய்து, தீண்டப் படாதவர்களாக்கி, சிறிதும் சுகாதார வசதியற்றதும், அண்ட அருகதை அற்றதும், ஊருக்குப் புறம்பே யுள்ளதுமான இடங்களில் வசிக்கும்படியாகவும், எந்த பொது ஸ்தாபனத்திலும் நுழைய முடியாதபடியும் செய்ததோடு, நம்மை எவ்வளவு தூரம் தாழ்த்த வேண்டுமோ, அவ்வளவுக்கும் ஆதாரமாக நூல்களும் எழுதி விட்டார்கள். இதனால் நமது முன்னோரும், நாமும் தாழ்த்தப்பட்டவர்களென்றே பட்டம் பெற்

று, பல இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றோம்.

இவ்விதம் இந்து மதத்தினராக இருந்து, பல கஷ்டங்களை அடைந்து வந்த நமது மூதாதைகள் ஏகம், சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை, சாந்தம் முதலிய சற்போதனைகளையுடைய கிறிஸ்து மதத்தில் பிரவேசித்தனர். "புலியூருக்குப் பயந்து நரியூருக்குப் போக நரியூரும் புலியூராயிற்று" என்ற முதுமொழிப்படி, நாளடைவில் கிறிஸ்து மதத்தில் வந்து சேர்ந்த ஜாதிக்கிறிஸ்துவர்கள் தங்களது இந்துக் கொள்கைகளை கிறிஸ்துவ மத நடபடிக்கைகளிலும் புகுத்தி, இங்கும் பறைக்கிறிஸ்துவன், பள்ளக் கிறிஸ்துவன், சக்கிலியக் கிறிஸ்துவன், குடியான, முத்திரியை, அம்பலகார சேர்வை கிறிஸ்துவன், நாடார் கிறிஸ்துவன், கள்ளக் கிறிஸ்துவன், முதலி செட்டிக் கிறிஸ்துவன், பார்ப்பாரக் கிறிஸ்துவன், என்ற பாகுபாடு படுத்தி, தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்கள் உட்காரக் கோவிலில் தனியிடம் ஒதுக்கி அவர்களுடைய வாடை, தோற்றம், நிழல் முதலியன சாராதபடி சிற்சில இடங்களில் சுவர் வைத்தும், மற்ற இடங்களில் கிராதி போட்டும் இழிவு படுத்தி வைத்திருப்பதோடு, திருச்சபையாகிய "தருவனத்துள் கருவேல மரங்களாக நிற்கிறார்கள்." அஃதாவது:—இனிய கனிகளைக் கொடுக்கக்கூடிய மரங்கள் நிறைந்துள்ள வனத்தில், கருவேல மரங்கள் இருந்தால் அவை மற்ற மரங்களைப் போல் மதுரம் பொருந்திய கனிகளைக் கொடாதது மன்றி, மற்ற மரங்கள் ஈயும்படியான கனிகளை மனிதர்கள் அடைய முடியா வண்ணம், நாலா பக்கங்களிலும் தங்களது முட்களை நிறைத்துத் தடை செய்து விடுகின்றன, இவ்வண்ணமே திருச்சபைச்குக் கருவேல மரங்களாயுள்ள உயர்ஜாதிக்கிறிஸ்துவர்கள் திருச் சபையின் கனிகளாகிய தேவதிரவிய அனுபானங்கள் பலவற்றை நாம் அடைய முடியாது செய்வதோடு, அனுதாபமே உருவாய்க் கொண்ட அரசாங்கத்தார் அளிக்க விருக்கும் அரிய உபகாரங்களையும் அடைய முடியாது முட்டுக்கட்டை போடுகிறார்கள். அதனால் நாம் இந்துக்களாய் இருந்த காலத்தில் என்ன நிலைமையில் இருந்தோமோ அதே போல் சமூக விஷயத்தில் தீண்டப் படாதவர்களாகவும், பொருளாதாரத்தில் மிக்க வறிஞர்களாகவும், அரசியலில் அன்னியர்களாகவுமிருந்து வருகின்றோம். எப்பொழுதும் போலவே நமது சகோதரர்களாகிய இந்து ஆதிதிராவிடர்களுடன் ஒரே சேரியில் வசித்து, ஒரே விதமானத் தொழிலைச் செய்து பல துன்பங்களையும் அனுபவித்து அவர்களோடு ஒரே சமூகமாகவே இன்றும் வாழ்ந்து வருகின்றோம். ஆகையால் நாமும் தாழ்த்தப் பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட வேண்டும்.

உண்மை இப்படி இருந்த போதிலும் கிறிஸ்துவர்களுக்குள் ஜாதி வித்தியாசமில்லை என்றும், அவர்களுக்கு மிஷனரிமார்கள் உதவி செய்வதால் தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவர்களுக்கு உதவி செய்ய வேண்டியதில்லை என்றும் கவர்ன் மெண்டார் தவறாகக் கருதி, நம்மைத் தாழ்த்தப்பட்ட சமூகங்களோடு சேர்க்காமல், "ஆட்டை ஓநாயோடு பிணைத்து விட்டது போல்" உயர்ந்த ஜாதிக்கிறிஸ்துவர்களோடு கிறிஸ்துவ தொகுதியில் நம்மைச் சேர்த்து விட்டார்கள். இதனால் என்ன வாயிற்றென்றால் நாம் முன்னேறுவதற்கு வேண்டிய சாதனங்கள் நமக்குக் கிடைக்காது போய்விட்டது. சட்டசபை, தாலூகா, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டிகளிலும் நமது குறைகளை எடுத்துச்சொல்ல, நம்முடைய பிரதிநிதிகளும் கிடையாது; சர்க்கார் உத்தியோகங்களும் கிடைக்கவில்லை.

இந்த நிலைமையில் உயர்ஜாதிக் கிறிஸ்துவர்களை அணுகி "ஐயா எங்களை கவர்ன்மெண்டார் கிறிஸ்துவத் தொகுதியில் சேர்த்து விட்டார்கள். அத்தொகுதியில் நாங்களே பெருந்தொகையினர்களாக இருக்கின்றோம்; ஆகையால் சட்டசபைகளிலும், ஸ்தலஸ்தாபனங்களிலும், உத்தியோகத்திலும் கிறிஸ்துவர்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்களில் எங்களுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கிக்கொடுங்கள்; உங்களுடன் போட்டிபோட முடியாது" என்றுகேட்டால் நமது பலவீனத்தை அவர்கள் தெரிந்துகொண்டு "அப்படி ஒதுக்கிக்கொடுக்க முடியாது. போட்டி போட்டு வெற்றியடைந்து கொள்ளுங்கள்" என்று "கொடுக்க மனதில்லாதவன் சினை ஆட்டைக்காட்டினது போல்" சொல்லி நம்மை அகற்றி விடுகின்றார்கள்.

கிறிஸ்துவர்கள் தான் இப்படியிருக்கிறார்கள் என்று, நமது சகோதரர்களாகிய இந்து ஆதிதிராவிடர்களை நாம் அணுகினால், கிறிஸ்துவர்களுடைய நாற்றமே ஆகாதென்று விரட்டி விடுகின்றார்கள். இதனால் நாம் "இருதலைக் கொள்ளி எறும்பு போல்" தவித்துக் கொண்டிருக்கிறோம். இதுவே நமது தற்கால நிலைமையாகும்.

இந்நிலைமையிலிருந்து விடுபட வேண்டுமாயின், நாம் இதுபோன்ற பல மகாநாடுகளைக் கூட்டி காருண்ய கவர்ன்மெண்டாருக்கு நமது குறைகளை எடுத்துக்காட்டுவது மிகவும் அவசியம் என்பதை உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. நாம் இதுவரையிலும் இந்து ஆதிதிராவிடர்களுடன் சேர்ந்து 'ஆதிதிராவிடமகாநாடுகள்' நடத்திவந்தோம். அதனால் இந்து ஆதிதிராவிடர்கள், நன்மைஅடைந்தார்கள். இது மிகவும் மகிழக்கூடியதே. ஆனால் நம்மைக்கவனிப்பார் ஒருவருமில்லாது போயிற்று. ஆகவே, நாம் இந்து ஆதிதிராவிடர்களினின்று பிரிந்து 'கிறிஸ்துவர் மகாநாடு' கூட்டுவது அவசியமாயிற்று. அதிலும்; நாம் கிறிஸ்துவர்களாயிருந்த போதிலும் தீண்டாமையினாலும் அதைச்சேர்ந்த எல்லாக்கொடுமைகளாலும் நசுக்குண்டு கிடக்கின்றோம். ஆகவே, தீண்டப்படாத சமூகங்களுக்கு என்னென்ன உதவி அவசியமோ, அவையெல்லாம் நமக்கும் கொடுக்கப்படவேண்டும் என்பதைத் 'தீண்டப்படாத கிறிஸ்துவர் மகாநாடு' என்று கூட்டப்பட்டது. நோயுடைய ஒருவன் சுகமடைய விரும்பினால் அவன் தன்னுடைய நோயை வைத்தியனிடம் விவரமாகச்சொல்லவேண்டும். அவன் அதை மறைப்பானேயாகில் அவனுக்குச்சில வேளை உயிர்ச்சேதம்வரும். அது போலவே, சமூக நோயாகிய தீண்டாமையினால்துன்புறும் நாம், சமூக வைத்தியனாகிய கவர்ன்மெண்டிடம் நம் நோயை விவரமாக எடுத்துச்சொல்லுவது அவசியம். அப்படிச் செய்யாது விடுவோமானால், நம் சமூகம் என்றும் மீளா அடிமைக்குழியிலஆழ்ந்துவிடும். பின்னும் தீண்டப்படாத கிறிஸ்துவர் மகாநாடு என்பதால், நமக்கு ஒன்றும் ஊறில்லை. ஏனெனில், தீண்டாமை, நம்முடைய குற்றமன்று. பிறர் நமக்குச் செய்யும் கொடுமையாகும். பிறரால் செய்யப்படும் கொடுமையினின்றுமீளவே, நாம் கவர்ன்மெண்டின் உதவியை நாடுகின்றோம். ஆகையால் தீண்டப்படாத கிறிஸ்தவர் மகாநாடு என்றுசொல்லிக்கொள்வதே இம்மகாநாட்டுக்கு மிகவும் பொருத்தமாகும்.

இப்பொழுது உங்கள் மேல் பெரும் பொறுப்பு சுமந்திருக்கின்றது. அதாவது:— இம்மகாநாட்டின் மூலம் நமது சமூகம் தற்காலம் எந்த நிலைமையில் இருக்கிறது என்று கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக்காட்டி அவர்களிடமிருந்து, நமது சமூக முன்னேற்றத்துக்கு என்னென்ன உரிமையும், உதவியும் வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். விசேஷமாய் இப்போது நடந்து வரும் அரசியல் சீர்திருத்த நடவடிக்கையில், நமது நிலைமை என்னவாகும் என்பதை ஆலோசித்து முந்தின மாண்ட் போர்டு சீர்திருத்தத்தில் ஏமாந்தது போல் ஏமாறாமல் நம்மைப்பாதுகாத்துக்கொள்ள வேண்டிய வழிகளைத்தேட வேண்டும். நம்மைக் கிறிஸ்துவத் தொகுதியினின்று பிரித்து தனிச்சமூகமாகவோ அல்லது தாழ்த்தப்பட்ட சமூகங்களில் ஒன்றாகவோ நடத்தவேண்டும்என்று கவர்ன்மெண்டாரிடம் விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும். மத விஷயங்களில் நமக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை எவ்விதம் அடைவதென்பதைப்பற்றி ஆலோசிக்கவேண்டும். அன்றியும் தீண்டாமை, வறுமை, கல்வியின்மை, குடிப்பழக்கம் இவற்றினின்று விடுதலை பெறும் மார்க்கத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்; இத்துறைகளிற் றொடர்ந்து வேலை செய்வதற்காக சங்கம் ஒன்றுஸ்தாபிக்கப்படவேண்டும். இவைகளெல்லாம் இன்றியமையாத காரியங்களாகையால், அன்பர்கள் எல்லோரும் பொறுமையுடனிருந்து கூட்டத்தை வெற்றியுடன் நடத்திக்கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சகோதரர்களே! அன்பர்களே!! ஆற்றலும், அனுபவமும், முயற்சியும் அமையப்பெற்ற பெரியோர்கள் அநேகர் இருந்தும், உருவினும் உணர்வினும், சிறியேனாகிய என்னை வரவேற்புக்கழகத் தலைவனாக தேர்ந்தெடுத்த வரவேற்புக்கமிட்டியார் அனைவருக்கும் என் நன்றியைச்செலுத்துகிறேன்.

பின்னர் மகாநாட்டின் தலைவர் திரு. S. M. ஞானப் பிரகாசம் B. A., B. L., அவர்களின் தலைமைப் பிரசங்கம் வருமாறு:—

தலைவர் பிரசங்கம்.

சகோதரசகோதரிகளே! எனக்கு ஊழியஞ் செய்யவேண்டு

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

யில் 4-மணிக்கு எழுந்து அரச வாழ்த்துப்பாடுவதில்லை. அரசன் இருப்பதைத்தெரிந்த சோணகிரிகள்தான் வேலையற்றுப்போய் அரசவாழ்த்துப் பாடிக்கொண்டிருப்பார்கள். அரசன் சுகாதாரத்துடன் வாழ்ந்தால் நீண்டகாலம் இருக்கிறான்; இல்லாவிட்டால் செத்துப்போகிறான். வாழ்த்துப்பாடுவதால் ஒருவன் நீண்டகாலம் வாழமுடியுமென்றால், யுத்தத்திற்குப் போகிறவர்களுக்கெல்லாம் விடாமல் வாழ்த்துப் பாடிக்கொண்டேயிருந்தால் அவர்கள் சாகாமல் வந்துவிடுவார்களா? அப்படியானால் லட்சக்கணக்கான வாழ்த்துகள். ஒவ்வொருவனும் பாட ஏற்பாடு செய்யலாமே! ஆகையால் அரச வாழ்த்துப்பாடாவிட்டாலும் அரசனது சட்டங்கள் அக்குடிகளை நடத்திக்கொண்டேயிருக்கக்கடமைப்பட்டிருக்கின்றன. 'என்னை தினந்தோறும் வாழ்த்தாதவர்களை நான் தண்டிப்பேன்' என்று எந்த அரசனாவது சொன்னானேயானால் அவ்வரசன் ஒரு வடிகட்டின முட்டாளாகத்தானிருக்கவேண்டும். அப்படி ஒரு அரசனும் இல்லவேயில்லை. மனித அரசனே இவ்வளவு காருண்யத்தோடிருக்கும்போது 'அரசனுக்கெல்லாம் அரசனாய் இருக்கும 'கடவுள்' அவ்வளவு குறுகிய புத்தியோடு இருப்பாரென்று நம்புவதற்கு இடமில்லை. ஆகையால் காந்தியார் தினம் காலை 4-மணிக்கு 'ராம பஜனை' செய்வதில் அர்த்தமில்லாததோடு அவர் 'கடவுளை' பற்றி மிக அற்பமான கருத்தைக்கொண்டிருப்பதாகவே தெரிகிறது. ஆதலால் அரசன் உதாரணம் மிகவும் அபத்தமென்பது வெளிப்படையாகத் தெரிகிறதல்லவா?

இனி அடுத்த கட்டுரையில் காந்தியாரின் இதர வாக்கியங்களையும் அலசுவோம்.

(S. G.)

பூனைக்கும்? பாலுக்கும்?

இந்திய சட்டசபையில் மேன்மை தங்கிய வைசிராய் என்ன பிரசங்கம் செய்யப்போகிறார் என்று நமது நாட்டு அரசியல் வாதிகள் அநேகர் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பிரசங்கமும் சென்ற 25—1—32 தேதியில் வெளிவந்து விட்டது. அதில் குறிப்பிடத்தகுந்த விஷயம தற்கால சட்ட மறுப்பைப் பற்றி ராஜப்பிரதிநிதி அவர்கள் சொல்லியிருக்கும் விஷயமேயாகும். மேன்மை தங்கிய ராஜப் பிரதிநிதியவர்கள் "சண்டைக்கு இழுக்கப் பட்டால் எந்த அரசாங்கம் பின்வாங்கி நிற்கும்?" என்று கேட்கும் கேள்வியும், "சட்ட மறுப்புக்கு விரோதமாக இப்பொழுது அமுலில் உள்ள முறைகள் அவசியமாக இருக்கக்கூடிய வரையில் அவைகள் தளர்த்தப்படவேமாட்டா" என்று கூறியிருப்பதும் மிகவும் கவனிக்கக்கூடிய விஷயமாகும். அதிலும், காங்கிரஸ்காரர்கள் பால் அநுதாபம் காட்டுவதன் மூலம் "தேசாபிமானிகள்" என்று காங்கிரஸ்காரர்களால் மதிக்கப்படவேண்டுமென்றும், சட்ட மறுப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலைமையிலிருப்பதின் மூலம் அரசாங்கத்தாருக்கும் "நல்ல பிள்ளைகளாக" இருக்கவேண்டுமென்றும் தடுமாறிக்கொண்டிருக்கின்ற கோழைத்தலைவர்கள் அவசியம் கவனிக்கவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்.

அவசரப்பட்டு சட்டமறுப்பைத்தொடங்கியவர்கள் காங்கிரசின் குட்டித்தலைவர்களென்பது நாடறிந்த விஷயமாகும். ஆனால் 'திரு காந்திக்கு இராஜப்பிரதிநிதி பேட்டி கொடுத்துப்பேசியிருந்தால் சட்டமறுப்பியக்கம் இவ்வளவு கஷ்டமான நிலைமைக்குப் போயிருக்காது' எனவும், ஆகவே 'ராஜப்பிரதிநிதியவர்கள் திரு காந்தியவர்களுக்குப் பேட்டியளிக்க மறுத்தது தவறு' எனவும் இந்த நடுநிலைமைக்காரர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் இவர்கள் இவ்வாறு சொல்லுவதில் ஒரு சிறிதும் அர்த்தமில்லை என்றுதான் நாம் சொல்லுகிறோம். உண்மையில் திரு, காந்தியவர்கள் சமாதானப்பிரியமுடையவராயிருந்தால் காங்கிரசின் சர்வாதிகாரியாகிய தன்னுடைய அநுமதியும் இல்லாமல் குட்டித்தலைவர்களால் தொடங்கப்பட்ட சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்திவிட்டு ராஜப்பிரதிநிதி அவர்களுடன்சமாதானம்பேசமுன்வருவாரானால் அது நியாயமாக இருக்கும். அப்பொழுது ராஜப்பிரதிநிதியவர்கள் சமாதானம் பேச மறுத்திருந்தால் காங்கிரஸ் தன்னுடைய கொள்கைப்படி சட்ட மறுப்பு ஆரம்பித்திருக்கலாம். அப்பொழுது இந்த நடுநிலைமைவாதிகள் கூறும் 'ராஜப்பிரதிநிதி காந்திக்குப்பேட்டியளிக்க மறுத்துவிட்டதுதவறு' என்று சொல்லுவதற்கு அர்த்தமிருக்கமுடியும்.

இது நிற்க, சட்ட மறுப்பியக்கத்தால் ஒரு காரியமும் நடக்கப் போவதில்லை என்பது நமது நேயர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே ஒழிய வேறில்லை. இது வரையிலும் நடந்த சட்ட மறுப்பினால் நமக்குக் கிடைத்த பலன் என்ன என்பதை யோசித்துப் பார்ப்பவர்களுக்கு இது விளங்காமற் போகாது. சட்ட மறுப்பு இல்லாமலிருந்தால், வட்ட மேஜை மகாநாட்டுக் கமிட்டிகளின் வேலை இன்னும் திறமையாகவும், தாராளமாகவும், விரைவாகவும் நடந்து முடியக் கூடும். இப்பொழுது கொஞ்சம் சீர்பட்டிருக்கின்ற தொழில்களும், வியாபாரங்களும் விளைவுப் பொருள்களின் அக விலைகளும் இன்னும் கொஞ்சம் சீர்படக்கூடும். சட்ட மறுப்பு நடைபெறுவதால்இவைகள் பாதக மடையக் கூடுமேயொழிய நமது நாட்டுக்கு வேறு கடுகளவு நன்மை கூட உண்டாகப் போவதில்லை யென்று ஆரம்ப முதல் கூறி வந்ததையே இப்பொழுதும கூறுகிறோம்.

ஆகையால், சட்ட மறுப்பு இயக்கத்தில் சிறிதும் நம்பிக்கையில்லா விட்டாலும் அது நாட்டுக்குத் தீமை விளைக்கும் பயனற்ற வழி என்று எண்ணிக்கொண்டிருந்தாலும், பாமர மக்களின் தூற்றுவதாலுக்குப் பயந்து பேசாமலிருக்கும் ராஜீய வாதிகள் தமது கோழைத்தனத்தை விட்டு விட்டு தைரியமாக சட்ட மறுப்பை அடக்குவதற்கு உதவி செய்வதே சிறந்த காரியமாகும். "சட்ட மறுப்பு நின்றால் அவசரச்சட்டங்களும்நீக்கப்படும்" என்னும் கருத்தைத் தெளிவாக இராஜப்பிரதிநிதியவர்கள் தமது பிரசங்கத்தில் கூறியிருப்பதைக் கவனித்து ஆவன செய்வதே கடமையாகும். "பூனைக்குந்தோழன் பாலுக்கும் காவல்" என்று சொல்லிக் கொண்டு வாழுகின்ற சமயம் இது வல்ல என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

கிறிஸ்துவமதத்தில் ஜாதியுண்டா?

இந்து மதத்தில் தான், சாஸ்திர சம்மதமாகவும், தெய்வ சம்மதமாகவும், பலர் கொடுமைப் படுத்தப் பட்ட மக்களாய் அந்த மதத்தை விட்டு வெளியேறினாலொழிய மனிதத் தன்மை பெற முடியாதவர்களாய்க்கோடிக்கணக்கான மக்கள் இருப்பதாக உலக முழுதும் தெரிந்திருக்கிறது. ஆனால் மிகவும் நாகரிகம் பெற்ற மதமாக-அன்பு மதமாக-சகோதரத்துவம் நிறைந்த மதமாகப் பிரசாரம் பண்ணப்பட்டு வரும் கிறிஸ்தவ மதத்தில் இத்தகைய சாதிக் கொடுமை இல்லை என்று பறை சாற்றப்பட்டு வருகிறது. உண்மையிலேயே அந்த மத வேதத்தின்படி - அந்த மத கர்த்தாவான யேசு நாதரின் கொள்கைப்படி அந்த மதத்தில், சாதி வித்தியாசம் பாராட்டவோ, சாதி வித்தியாசம் காரணமாகத் தாழ்த்தப் பட்ட மக்களைக் கொடுமைப் படுத்தி வைத்திருக்கவோ ஒரு ஆதாரமும் இல்லை யென்பதை நாம் அறிவோம்.

இத்தகைய ஒரு மதம் ஜாதி வித்தியாசங்களும், கொடுமைகளும் நிறைந்த இந்தியாவில், அதிலும் தென்னிந்தியாவில் எந்த நிலையிலிருக்கிறது என்று பார்த்தால், இந்து மதத்தின் அண்ணனாகவோ, அப்பனாகவோ, பாட்டனாகவோ தான் இருந்து வருகிறதென்று கூறலாம். இந்து மதக் கோயில்களில் எப்படி ஜாதிக்கு ஒரு இடம் ஒதுக்கப் பட்டிருக்கிறதோ அது போலவே கிறிஸ்துவ மதக் கோயில்களிலும் ஜாதி வித்தியாசம் பாராட்டப் பட்டுத் தனித் தனிஇடங்கள் ஒதுக்கப் படுகின்றனவாம். ஆனால் அரசாங்கக் கணக்கில் கிறிஸ்தவர்களுக்கு ஜாதி வாரிக் கணக்கு போடாமல் எல்லாக் கிறிஸ்தவர்களையும் பொதுவாகக் "கிறிஸ்தவர்கள்" என்ற தொகுதியிலே சேர்க்கப் பட்டிருக்கின்றது. இக்காரணத்தால், தீண்டாத சாதியினராகக் கருதப்படும் கிறிஸ்தவர்கள், பொது ஸ்தாபனங்களில் ஒருவித உரிமையும் பெற முடியாமல், எல்லா உரிமைகளையும் உயர்ந்த சாதியாராக இருந்து கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களே அடைந்து வருகிறார்கள்.

எப்படி இந்து மதத்தில் ஒவ்வொரு சாதிக் காரர்களும் தங்கள் தங்களுக்குக் கீழுள்ள சாதியார்களின் மேல் வெறுப்பும் வித்தியாசமும் பாராட்டி வருகின்றார்களோ அது போலவே கிறிஸ்தவ மதத்தில் புகுந்துள்ளவர்களும், நாயுடு, முதலியார், பிள்ளை, அய்யர், முதலிய ஜாதி வித்தியாசங்களை விடாமல் வைத்துக் கொண்டு, ஆதிதிராவிடக் கிறிஸ்தவர்களையும், மற்ற தாழ்த்தப்பட்ட வகுப்புக் கிறிஸ்தவர்களையும் வித்தியாசமாக வைத்துக்கொடுமை செய்து

வருகின்றனர். இவ்வாறு செய்து வருவதைப் பற்றிய கிளர்ச்சி நீண்ட நாளாக நடைபெற்றுங்கூட இன்னும் அம்மத குருமார்கள் இவ்வேற்றுமைகளையொழித்து உண்மையான கிறிஸ்தவக் கொள்கைகளை நிலை நிறுத்த முயற்சி செய்யாமலிருந்து வருகிறார்கள்.

ஆகவே இதுவரையிலும் பொறுமையோடு கொடுமைகளை அநுபவித்து வந்த தீண்டாத வகுப்புக்கிறிஸ்துவர்கள் இப்பொழுது கண்விழித்துக்கொண்டு அதிக ஊக்கத்துடன் கிளர்ச்சி செய்வதைக்கண்டு நாம் பாராட்டுகின்றோம். இதற்கு உதாரணமாகச்சென்ற 23.1.32ல் லாலுகுடியில் தீண்டப்படாத கிறிஸ்துவர்கள மகாநாடு கூடியிருப்பதைக்கூறலாம். அம்மகாநாட்டுத்தலைவர் திரு. ஞானப்பிரகாசம் அவர்களும, திறப்பாளர், திருமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் அவர்களும், வரவேற்புக்கழகத்தலைவர் திரு. ஆரோக்கியசாமி அவர்களும், மற்றும் உள்ள உபந்யாசகர்களான திருவாளர்கள் டி. வி. சோமசுந்தரம், டி. பி. வேதாசலம், வி. ஐ. முனிசாமி பிள்ளை முதலியபலரும் தீண்டப்படாத கிறிஸ்துவர்களுக்குள்ள குறைகளையெல்லாம் விளக்கமாக எடுத்துககூறியிருக்கிறார்கள். ஆகையால் இனியாவது அம்மத குருமார்கள் தீண்டாதவர்களுக்குள்ள குறைகளை நீக்கி மதக்கொள்கைப்படி யாதொரு வேற்றுமையும் பாராட்டாமல் அவர்களையும் நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும், அல்லது அரசாங்கத்தார் அவர்கள் விரும்புகிறபடி தீண்டப்படாத கிறிஸ்துவர்களுக்கும் மற்ற ஆதிதிராவிடர்களுககுக்காட்டுவதைப்போலத்தனிச்சலுகை காட்ட முன்வரவேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

கடைசியாகத் தீண்டப்படாத கிறிஸ்துவர்களுக்கும் ஒரு வார்த்தைசொல்லிமுடிக்கிறோம தீண்டப்படாத கிறிஸ்துவர்களின் குறைகள் நீங்காவிட்டால் அம்மதத்திலுள்ளவர்கள் நீக்க முற்படாவிட்டால் இந்து மத ஆதிதிராவிடர்கள் எந்த வகையில் தங்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கும் மதக்கொடுமைகளையும் ஜாதிக்கொடுமைகளையும் நீக்கிககொள்ள விரும்புகின்றார்களோ அந்த வகையிலேயே தீண்டப்படாத கிறிஸ்துவர்களுக்கும் தங்கள் குறைகளை நீக்கிககொள்ள முயலுவதே சமத்துவம் பெறுவதற்கு ஏற்றவழியாகும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

காந்தி தவறு

அம்பேத்கார், ஷவுக்கத்அலி கருத்து.

லண்டன் மகாநாட்டுப்பிரதிநிதிகளாகச்சென்ற டாக்டர் அம்பேத்காரும், மௌலானா ஷவுக்கத் அலியும் இன்று காலையில் 'மூல்டான்' என்ற கப்பலில் பம்பாய் வந்து சேர்ந்தார்கள். சேர்ந்ததும் பத்திரிகைப்பிரதிநிதி கண்டு கேட்டபோது டாக்டர் அம்பெத்கார் கீழ்வருமாறு கூறினார்:-

'லண்டனில் திரு. காந்தி எல்லாவிஷயங்களிலும தடுமாறி விட்டார். தாழ்ந்த வகுப்பினர்களின் உரிமைகள் விஷயத்தில் அவர் நடந்துகொண்ட முறையைக்கொண்டு நான் அதிக அதிருப்தியடைந்தேன். இங்கிலாந்திற்கு காந்தியைவிட சிறந்த பிரதிநிதி ஒருவரை காங்கிரஸ் அனுப்பியிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்.'

மௌலானா ஷவுக்கத்அலி கூறியதாவது:—

'காங்கிரஸ் திரும்பவும் சட்டமறுப்பை ஆரம்பித்து விட்டதைக்குறித்து நான் அதிக வருத்தமடைகிறேன். ஆரம்பிக்கவேண்டிய அவசியமெதுவுமே இப்பொழுது ஏற்படவில்லை. இந்தியருடன் தகுந்த சமாசமான நிலைமைக்குவர பிரிட்டிஷ் மக்கள் அதிக ஆவலோடேயேயிருககிறார்கள். லண்டன் கமிட்டி அங்கத்தினர்களும் முக்கியமாக லார்டுலோதியனும் நல்லெண்ணமேகொண்டிருககின்றார்கள் அவர்கள் இந்தியாவின் நிலைமையையெல்லாம் அறிந்துகொண்டிருக்கிறார்கள். இந்தியாவின் நன்மையையுத்தேசித்து இவர்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். காங்கிரஸ் பகிஷ்கரிக்க முற்பட்டால் மற்ற கட்சியினர் அவர்களுடன் சேரமாட்டார்கள்'

"தமிழ் நாடு"

"நாடார் குலமித்திரன்" சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

நமது பத்திரிகாலயத்திற்கு அடிக்கடி பத்திரிகை அனுப்பும்படி கேட்கும பழைய சந்தாதாரர்களுக்கும, புதிய சந்தாதாரர்களுககும்தெரிவித்துக்கொள்வது என்னவென்றால்,

நமது பத்திரிகை சுமார் ஆறு மாத காலமாய் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருககிறது. இது விஷயத்தை முனபு நாடார் குலமித்திரன் பத்திரிகையிலும் வெளியிட்டுள்ளோம். மறுபடியும் பத்திரிகை நடத்துவதற்காக வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மித்திரன் வெளியேறியவுடன் பழைய சந்தாதாரர்களுக்கும் புதிய சந்தாதாரர்களுக்கும் பத்திரிகையனுப்பிவைககின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மானேஜர்.

சதிபதிகள் அன்பு.

உடன்கட்டை ஏறி உயிர் நீத்த மனைவி.

கேமரிப்பூர் ஜில்லாவிலுள்ள மாகோவா என்ற ஊரில் வசித்து வந்த திரு கிலோனும, திரு. ராஜாராணியும் விவாகமாகிய நாள் தொட்டு இணைபிரியா அன்புடன் ஒருவரை ஒருவர் நேசித்து இன்பவாழ்க்கை நடத்தி வந்தார்கள். கணவன் நோய்வாய்ப்பட்டு தான் மரணத்தருவாயிலிருப்பதாக தன் மனைவியிடம தெரிவிக்க அவள் தானும் உயிர் துறந்து விடுவதாகத்தெரிவித்தாள். கடைசியாக சென்ற டிசம்பர்மீ 11 தேதி கணவன் உயிர் துறக்க, பெண்ணின் பிடிவாத குணத்தையும், அவள் கணவன் மீது கொண்ட வாஞ்சையையுமறிந்த உறவினர் போலீசுக்குத தெரிவிப்பதாகப்பயமுறுத்தினர் ஆனல் அப்பெண் தானே நேரில் சென்று போலீசதிகாரிகளிடம் தன் எண்ணத்தைத்தெரிவித்தாள். போலீசார் அவளை எவ்வகையிலும் சமாதானப்படுத்த முடியாமையால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் மயகக மருந்தைக் கொடுக்கும்படி செய்தனர். அம்மாதை அம்மருந்து ஒன்றும் செய்யவில்லை. எப்படியோ ஒருவருககும் தெரியாது அம்மாது சுடுகாட்டிற்குச் சென்றுதன் எண்ணத்தை நிறைவேறறுக்கொண்டாள்.

சட்டமறுப்புக்கு எதிர் பிரசாரம்

புனா பார்சிகள் முயற்சி.

புனா திரு. ருஸ்டம் பானர்ஜி அவர்களை முககியஸ்தராகக் கொண்டு "பாரசி இராஜபக்தர் சங்கம்" "மறியல் எதிர்ப்பு பார்சி தொண்டர்ப்படை" என்ற இரண்டு சங்கங்கள் ஸ்தாபிக்கபபட்டு அங்கத்தினர்கள் சேர்தது வரப்படுகிறார்கள்.

இந்த இரண்டு இயக்கங்களும் காங்கிரசிற்குஎதிரிடையாக வேலை செய்ய ஏற்பட்டவை. காங்கிரஸ் பிரிட்டிசாருக்கு விரோதமாகச் செய்யும் பிரசாரங்களையொழித்து ராஜபக்தியை ஏற்படுத்துவது, காங்கிரஸ் சம்பந்தமான எந்த மூட்டாள் தனமான இயக்கங்களிலும் அகபபட்டுக்கொள்ளக்கூடாதென பார்சி சமூகத்தினரையும், வாலிபர்களையும் எச்சரிக்கவும் மறியல் சூழ்ச்சியால் கஷ்டமும், நஷ்டமும் அடையும் வியாபாரிகள், மற்றுமுள்ளோருக்கு வேண்டிய உதவி அளிப்பது முதலியன இச்சஙகங்களின் முக்கிய நோக்கங்களாகும்.

சாமிக்கு ஆபத்து.

ஈரோடு.

சென்ற 25—1—32 திங்கள் கிழமை நடந்த கருமாத்திக் கருப்பண்ணன் கோவில் 'வேல்' ஊர்வலம்உற்சவத்தன்று, பக்தர்கள் வேலை எடுத்துக்கொண்டு கோட்டைக்குச் சென்றார்கள். ஆங்கு ஒரு வீட்டில் 'வேலை' நிறுத்தி வழக்கம் போல் பூஜை செய்து சாமி அழைத்தார்கள். அப்பொழுது அங்குள்ள சில பக்தர்களுக்குச் சாமி வந்து விட்டது. சாமி வந்த பக்தர்கள் 'வேலை' பிடுஙகினார்கள்!. 'வேலை' வைத்திருந்தவர்கள் மறுத்தார்கள். உடனே எதிரிகள் கோபம் மூண்டு பலத்த சண்டை செய்தார்கள். இருதிறத்தாருக்கும் சண்டை பலப்பட்டு ஒரு 'வேலை' வளைத்து விட்டதாகவும் தெரிகிறது. 'வேலை'க்கொண்டு வந்த சில பக்தர்களுக்கு அடி விழுந்திருப்பதாகவும தெரிகிறது. கோவில் பூசாரி சென்றவிடம் தெரியவில்லை. அச்சண்டையிலும் அவர் கலந்துகொள்ளவில்லை.

கோவிலிலிருந்து பக்தர்கள உற்சாகத்தோடு 'வேலை' ஊர்வலமாக எடுத்துச்சென்று பிறகு கோவிலுக்குத்திரும்பும்பொழுது மிக துககத்துடன் சென்றது அக்கருமாத்திக்கருப்பண்ணனுக்குத்தெரியாது போலும்

இப்படி இவ்வாபாசமான காரியத்தில் பிரவேசித்து வீணாக பணத்தை விரயம் செய்வதுமன்றி தேக சிரமததுடன் காலத்தை வீணாக்கினதுமல்லாமல் இனிமேலாவது இக்காரியத்திலீடுபடாமல் மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச்செய்யுமாறு அப்பக்தர்களை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம் என ஒரு நிருபர் எழுதுகிறார்,

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

உலகில் உள்ளவர்களில் ஆசையில்லாதவர்கள் ஒருவரும் இல்லை. எல்லோரும் மனிதராக வாழ்கிறவரையிலும் ஆசையோடு கூடித்தான் வாழ்கிறார்கள். ஆசையில்லாதவர்களுக்கு இவ்வுலகில் வேலையும் இல்லை. அவர்கள் வாழ்க்கையையும் நடத்த முடியாது. மனித வாழ்க்கையை மேன்மையுறச் செய்வது ஆசையேயாகும். ஆசை கூடாது என்று சொல்லுவது வீண் பேச்சாகும். சோம்பேறிகளின் வார்த்தையாகும். பிறருக்கு கூறும் உபதேசமாகும் அன்றி அனுஷ்டிக்க முடியாததாகும். சுருக்கமாகக்கூறினால் கையிலாகாதவர்களின் ஆடம்பரப்பேச்சாகும். ஆகையால் ஆசை மனித வாழ்க்கைக்கு அவசியமானதென்றே நாம் கூறுவோம். ஆசையென்றால் பிறர் [illegible] பாதிக்காமல் [illegible] மற்றவர்களையெல்லாம் [illegible] அடிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் [illegible] வேண்டும்; [illegible] ஆசையாகாது [illegible]; [illegible] ஆசை ஆசையென்பது மற்றவர்களைப்போல் [illegible] உயர்ந்து வாழவேண்டும் என்னும் [illegible] ஆசையாகும். [illegible] ஆசையானது [illegible] என்றும் [illegible] சொல்லுகிறோம் [illegible] சுயமரியாதை என்றும் கூறுகிறோம்.

ஆனால் [illegible] உலகில் பலர் இத்தகைய ஆசையில்லாமல் பேராசையும் சுயநலமும் உடையவர்களாயிருக்கின்றனர். இவர்களில் பொருள்மீது பேராசை கொண்டவர்கள் பலர். புகழ்மீது பேராசை கொண்டவர்கள் பலர். இவ்வாறு பொருள் வேண்டுமென்றவர்களும், புகழ்வேண்டுமென்றவர்களும் அவைகளை சம்பாதிக்க ஏதாவது காரியங்களைச் செய்யவேண்டியவர்களாயிருக்கிறது. சுலபமாயிருந்தால் [illegible] 'நடப்பது நடக்கும்' 'வருவது தானே வரும்!' 'அவனன்றி அணுவும் அசையாது' எல்லாம் கடவுள் சித்தம்' 'அன்று எழுதினவன் அழித்தெழுதப்போவதில்லை' என்று பேசுகின்ற எல்லோராலும் போப்படுவது வழக்கந்தான். ஆனால் யாரும் இப்பழமொழிகளை நம்பிச் சும்மாயிருப்பதில்லை. காரியம் கைகூடாதபோதுதான் இந்த வேதாந்தங்களை'ப் பேசுவார்கள். ஆகையால் எல்லோரும் தாங்கள் நினைத்ததை அடைய ஏதேனும் முயற்சிதான் செய்கிறார்கள். அதற்காகக்கஷ்டப்படுகிறார்கள்.

இக்காலத்தில் பொருளுக்காகவும் புகழுக்காகவும் செய்யும் முயற்சிகளில் தேசிய வேஷமும் ஒன்றாகப் போய்விட்டது. சோம்பேறிகளுக்கு இது ஒரு நல்ல பிழைப்பாகிவிட்டது. கையிலாகாதவர்களுக்கு இது ஒரு கொழுத்த வரும்படிக்கு இடமாகிவிட்டது.

ஆச்சரிய நாடகம்.

''ஸ்க்குருஉ வூர்''

முன்காலத்தில் [illegible] தேசவேஷம் பூண்டவர்களுக்குமதிப்பிராது. 'கடவுள் அவதார' [illegible] பவர்களுக்குத் [illegible] வம் இருந்தது. [illegible] ரித்த [illegible] மக்கள் மரியாதை செய்தனர். அவர்கள் [illegible] டிய உதவிகளைத் தானமாகப் புரிந்தனர். ஆனால் இக்காலத்தில் அவர்களின் மதிப்பு—தெய்வ [illegible] வேஷக்காரர்களின் கௌரவம் மலையேறி விட்டது. இதற்கு பதிலாக தேசிய வேஷத்திற்குக்கௌரவம் உண்டாகி விட்டது. [illegible] மலையேறிப்போன மத வேஷத்தின் மதிப்பு [illegible] தேசிய வேஷத்தின் மேல் வந்து உட்கார்ந்து கொண்டது.

[illegible] கதர் உடையணிந்து [illegible] [illegible] [illegible] கள் [illegible] ஏழை [illegible] [illegible] இட்டவிலை [illegible] [illegible] [illegible] பிலை [illegible] [illegible] அணுவும் [illegible] ஒருவன் [illegible] என்று [illegible] ஜனங்களின் பணத்தைக் கொள்ளையடிக்கும் தேசாபிமானியாய் விடுகிறான். அவனுடைய [illegible] சியக்கொடியைக் கட்டிவிடுகிறான். காந்தியின் படத்தையும் மற்ற தலைவர்களின் படத்தையும் மாட்டி வைத்துக் கைப்போடுகிறான். இவைகளை [illegible] தேசபக்தர்; தியாக புருஷர்; ஆகிவிடுகிறான்! தேசியம்! வெட்கம்! வெட்கம்!

அடுத்தபடியாக நாடகக்காரன் தேசாபிமானி. கொட்டகையில் கட்டப்பட்டிருக்கும் திரைகள் அன்னிய நாட்டுத்துணிகள்; அதில் எழுதப்பட்டிருக்கும் [illegible] அன்னிய நாட்டிலிருந்து வந்தவை; அவன் வேஷம் போடுவதற்கு [illegible] பொருள்கள் அன்னிய நாட்டுப்பண்டங்களால் செய்தவை அவனேடு சேர்ந்துகொண்டு 'காரமா' என்று கத்தும் ஆர்மோனியம் அன்னிய நாட்டிலிருந்து வந்தது. இவ்வளவு இருந்தாலும் நாடகமேடையில் ஒரு கதர்ப் பாட்டு பாடினால் தேசாபிமானியாய் விடுகிறான். ஒரு கைராட்டினப் பாட்டுப் படினால் தேசபக்தனாய் விடுகிறான். ஒரு காந்திப்பாட்டு பாடினால் தேசிய வீரனாகிவிடுகிறான். ஒரு பகத்சிங் பாட்டுபாடினால் தியாகியாகிவிடுகிறான். அவனுடைய தேசாபிமானத்தையும், சுயராஜ்யதாகத்தையும் நாடகாபிமானிகள் புகழ ஆரம்பித்து விடுகின்றனர். நமது ஜனங்கள் உண்மையை உணர்வதில்லை. அவர்கள் எதற்காக அக்காரியத்தைச் செய்கிறான் என்று யோசிப்பதில்லை. காப்பிக்கிளப்புக்காரன் தேசியவேஷம் போடுவதால் இன்னும் கொஞ்சம் வியாபாரம் அதிகமாய் நடந்து அதன் மூலம் பத்தொன்பதைப் பலமாக அடிக்கிறான். நாடகக்காரன் தேசியப் பாடல் பாடுவதனால் இன்னும் இரண்டு கொள்ளையை அதிகமாக அடிக்கிறான். உண்மையிலேயே இவர்கள் ஏழை மக்கள் மேல் இரக்க முடையவர்களாயிருந்தால் என்ன செய்ய வேண்டும்? காப்பி கிளப்புக்காரன் தனது வியாபாரத்தை நியாய மாக நடத்த வேண்டும்; நாடகக்காரன், தனது நாடகத்தில் அநியாயமான கட்டணம் வசூலிக்காமல் [illegible] [illegible] ஆகிய நாட்டு பாகத்தை [illegible] விட வேண்டும். இவ்வாறு செய்ய இவர்கள் முன்வருவார்களா? அப்படியில்லாமல் மக்களை ஏமாற்றுவதற்கு வேஷம்போடுவதில் என்ன பயன்?

[illegible] கொள்ளையடிக்கும் காப்பிக் கிளப்புக்காரன் தேசாபிமானி, ஊரைக் கொள்ளையடிக்கும் நாடகக்காரன் தேசாபிமானி, உண்மையில் ஜனசமூகத்திற்கு விரோதிகள் இவர்களைத் தவிர விரோதிகள் வேறு யாரும் இல்லை. இவர்கள் இல்லா விட்டால் நமது ஏழை மக்களின் பணம் எவ்வளவோ மீதமாகும். கள்ளுக்கடைகள் மேலல்ல, காப்பிக்கடை அவ்வளவு மோசம். காப்பிக்கடையும் கள்ளுக்கடையும் அண்ணன் தம்பிகள். இவைகளின் அப்பன் தான் நாடகக்கொட்டகை. இவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்தால் ஆச்சரியக் காட்சிகளாகத் தோன்றுகின்றன. உதிர்ந்து நாடகங்களாகத் தோன்றுகின்றன. இவற்றை மூடப் பழக்க வழக்கங்களும் மூடத்தனமான மத நம்பிக்கைகளும் நிறைந்த நமது நாட்டில் தான் இப்படியான காரியங்களைப் பார்க்கலாம். அறிவுடைய வேறு எந்த நாட்டிலும் பார்க்க முடியாது.

நான் சொல்லுகிறேன் கோபித்துக் கொள்ள வேண்டாம். கள்ளுக்கடை மறியலுக்கு போகும் நண்பர்களே! உங்களுக்குக் காப்பிக் கடையின் சங்கதி தெரியாதா? நாடகக் கொட்டகையின் சங்கதி தெரியாதா? ஏன் இவைகளுக்கும் மறியல் செய்யப் போவதில்லை? காப்பிக்கடைக்காரர்கள் பார்ப்பனர்கள், நாடகக்காரர்கள் தோழர்கள் புராணப் பிரசங்கிகள், ஜன சமூகத்தை முட்டாளாக்குகிறவர்கள் ஆகையால் தான் அவர்களிடம் போவதில்லை போலும்! கள்ளுக் கடைக்காரர்கள் பார்ப்பனரல்லாதார் தானே, ஆகையால் தான் காரமாக அங்கே போகின்றீர்கள் போலும்!

அரசாங்கம் என்றால் இன்னதென்று தெரியாதவன்; காங்கிரஸ் என்றால் கூட இன்னதென்று தெரியாதவன்; பெரிய தேசாபிமானி இந்தப் பட்டம் மிக லேசானது. ஒரு காந்திக் குல்லாய் வேண்டும், ஒரு கதர் சட்டை வேண்டும், ஒரு கதர்த்துண்டு வேண்டும். காந்திக்கு ஜே; காங்கிரசுக்கு ஜே; பாரதமாதவுக்கு ஜே; என்று சத்தம் போட வேண்டும்; கையில் உண்டிப் பெட்டி எடுத்துக் கொண்டு பிச்சைக்காரர்கள் போல் குலுக்கிக் காசு வாங்க வேண்டும். இவைகளே தேசாபிமானப் பட்டத்துக்குரிய காரியங்கள். இத்தகைய தேசாபிமானிகள் தான் அதிகம்.

நமது நாட்டில் உயர்ந்த சாதிக்காரர்கள், வருணாசிரம தருமக்காரர்கள் செய்யும் அக்கிரமங்களைப் பற்றி பேசுவதில்லை; கண்டிப்பதில்லை. இவர்களால், ஏழைமக்கள்-தாழ்த்தப்பட்ட மக்கள் அடையும் துன்பத்தைப் பார்ப்பதில்லை; அதை நீக்கவழி தேடுவதில்லை; வாய் திறந்து சொல்லுவதில்லை; இதற்காக முயற்சி செய்வோர்களுக்கும் பலவகையில் முட்டுக்கட்டைகள் போடுவதே; இப்படிப்பட்ட பேர்வழிகள் "வெள்ளைக்கார ஆட்சி, ராட்சத ஆட்சி, அக்கிரம மான ஆட்சி, இது ஒழிய வேண்டும்" என்று பேசி விட்டால் இவர்கள் தேசத் தலைவர்களாகி விடுகின்றார்கள் காங்கிரஸ் பேரால் கொள்ளையடிப்பவர்களாகி விடுகின்றார்கள்.

அன்பர்களே! உள்ளதைச் சொன்னேன். இவற்றையெல்லாம் யோசித்துப் பாருங்கள்! பிறகு நீங்கள் எப்படியாவது போங்கள்! சொல்லுவது என்னுடைய கடமை. நான் சொல்லுகிறபடி என்னைப் பொறுத்த வரையிலும் நடப்பதும் என்னுடைய கடமை. உங்களை நான் என்ன பண்ண முடியும்? நான் ஒரு சர்வாதிகாரியாக இருந்தால் நான் சொல்லுகிறபடியே உங்களையும் நடக்கச் செய்வேன். வந்தனம். பிறகு சந்திக்கிறேன்.

தஞ்சை ஆரியா வாசகசாலை முதலாவதாண்டு விழா.

மேற்படி வாசகசாலையின் முதலாவதாண்டு விழா 24-1-32 ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு கான் சாகிபு சையது டாஜுடீன் சாகிபு பகதூர் எம் எல். ஸி. அவர்களின் தலைமையில் கூடியது விழாவிற்கு ஆண்களும் பெண்களும் ஏராளமாக வந்திருந்தனர். தலைவர் முன்னுரைக்குப்பின் சென்றஆண்டு அறிக்கையை வாசகசாலை அமைச்சர் படித்தார். பின் பல அன்பர்கள் பல அரிய விஷயங்களைப் பற்றி பேசிய பின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

காந்தீயமென்பது பார்ப்பனீய பிரசாரம்.

(நாகை கே. முருகேசன்)

காங்கிரஸ் இயக்க விபரிசைக்கு பல உபகரணங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அவைகளில் காந்தி, கதர், ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமை முதலியவைகள் முக்கியமானவை. அவற்றுள் காந்தி அல்லது மகாத்மா காந்தி என்பது முதலில் நிற்கிறது. இந்த பேரை உச்சரிக்காத காங்கிரஸ் வாதிகள் எவருமிருக்க மாட்டார்கள். அப்படிச் சொல்லிக் கொள்ளாத பொழுது காங்கிரஸ் என்பது வெறும் கட்டுக் கதையாக முடியும். காந்தியினுலேயே காங்கிரஸ் விளம்பரப் படுத்தப்பட்டதென்றும், காங்கிரசினுலேயே காந்தி திரு. காந்தியாய் இருந்தவர் மகாத்மா காந்தியாய் துலங்குகின்றார் என்பதும் யாவரும் அறிவர். இவரும் தம்முடைய மகாத்மா பட்டத்திற்கு யோக்யதை உடையவராக ஒவ்வொரு நிமிஷமும் பிரயத்தனப்பட்டுக் கொண்டு வருகிறார். மகாத்மா காந்தியைப் போல பதின் மடங்கு அறிவிற்சிறந்தவர்களும், பகவத்கீதை பிரசங்கிகளும் வர்ணாச்சிரம தர்மிகளும் நமது இந்தியாவில் தோன்றி மறைந்தவர்கள் எவ்வளவோ பேர் எனினும் இப்பொழுது வழங்கும் மகாத்மாவின் பெயர் மாத்திரம் மூலை முடுக்குகளிலெல்லாம் முழக்கப்படுவதும் என்ன காரணத்தினுலென்று மௌடீகத்தில் ஆழ்ந்து கிடக்கும் மக்களுக்கு யோசித்துப் பார்ப்பதற்கு மூளை இல்லா விட்டாலும் சுயமரியாதைக்காரன் அதனுடைய குட்டை எடுத்துச் சொல்லி நியாயத்தை நிலை நிறுத்துவதற்கு பிரயத்தினப்படும் பொழுது தேசத்துரோகிகள் என்று அலங்கரிக்கப்படுவது ஒரு ஆச்சரியமல்ல. இதற்காக நமது கடமையைச் செய்வதற்கு பின்னடைவதும் நியாயமல்ல. இதனுல் திரு. காந்தியை அறிவற்றவரென்றோ ஒன்றுக்கு உதவாதவரென்றோ ஒழுக்க ஈனரென்றோ நாம் குறை கூற முன்வரவில்லை. காங்கிரஸ் காரர்கள் திரு. காந்தியை அறிந்திருப்பதை விட சுயமரியாதைக்காரன் திரு. காந்தியை பதின்மடங்கு அதிகமாகவே அறிந்திருக்கிறான். ஆனால் அவருடைய பேரைச் சொல்லிக் கொண்டு உண்மையை மறைத்து தங்களுடைய வைதீக [illegible] ஆதிக்கம் தேட முனைந்து நிற்கும் வைதீக காங்கிரஸ் வாதிகளின் சூழ்ச்சியை நாம் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. திரு. காந்தி அவர்களுடைய தேசபக்தியானது அளவு கடந்ததாய் இருக்கலாம். அதை ஒரு சிறிதும் ஆட்சேபிக்க முடியாது. அவனுடைய தனது தாய்நாட்டின் விடுதலைக்காக, மக்களின் நன்மைக்காக ஓயாது உழைக்க வேண்டுமென்ற தனது உயிரையே வேண்டுமானுல் தியாகம் செய்ய வேண்டுமென்ற ஊக்கத்தை உடையோரென்பதை நாமும் அறிவோம். ஏனை இந்தியரும் அறிவர் என்றாலும் தற்போது திரு காந்தியின் உண்மை நிலை என்னவென்பதை நாம் உற்று நோக்க வேண்டுமென்பது தான்.

திரு. காந்தி அவர்கள் வைதீக சூழ்ச்சிக்கு ஆட்படாமல் எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடியாதென்பதை தெள்ளத் தெளிய அறிந்து கொண்டார். அவர்களுடைய துணையின்றி எவ்வித சிறிய காரியத்தையும் செய்ய இயலாதென்பதை உணர்ந்தே வைதீகர்களுடைய கைப்பொம்மையாக இருந்து காலங்கழிக்க முற்பட்டு விட்டாரல்லவா? எவ்வளவோ நல்லறிவு இருந்தும் சுதந்தரத்துடன் தான் ஒரு காரியம் செய்ய இயலாத போதும், தன் பகுத்தறிவுக்குத் தோன்றிய ஒவ்வொன்றையும் எடுத்து அப்படியே விளக்குவதற்கு பலமில்லாத போதும், பகவத்கீதை பாராயணம் செய்து வர்ணாசிரமத்திற்கு ஆக்காலத்து பேசுவதை விட வேறு என்ன தான் செய்ய முடியும்? வைதீக ஆதிக்கத்தில் அழுந்திக்கிடக்கும் ஒரு தேசத்தில் உண்மை காந்தி, பகுத்தறிவை உடைய காந்தி எங்ஙனம் வெளித்தோன்ற முடியும். ஆகையால் அவர் கூறும் சுயராஜ்யத்தையும், ராமராஜ்யத்தையும் சுயமரியாதைக்காரர் எப்படி மனமுவந்து ஆதரிக்க முடியும்! இவர் கூறுவதாகச் சொல்லப்படும் தேசிய நிழலிலிருந்து வாழ நினைப்பதெல்லாம் பார்ப்பனீயத்திற்கு கண்ணை மூடிக் கொண்டு அடிமைப் படுவதாக ஆகுமே தவிர வேறென்ன? ஒரு வேளை திரு. காந்தியவர்கள் இந்த உண்மையை அறிந்து கொண்டவராயிருந்தாலும் அவர் ஒரு திறமையான ராஜீய வாதியாதலால் தன்னுடைய தேச ஊழியத்தை அந்த வேஷத்துடனேதான் நடித்து, தன் காரியத்தை, தனது நோக்கத்தை சாதித்துக் கொள்ளுகிறாரென்கின்ற சாமர்த்தியமாய் இருக்கலாமென்று நினைப்பதாயினும் ஆதாரம் ஆகாரமில்லாமலில்லை. என்னுடைய தந்திரமெல்லாம் பாமரர்களுக்கு எங்ஙனம் படமுடியும். வைதீகத்தில் [illegible] சூழ்ந்து கிடக்கும் மக்களுக்கு [illegible] இதைவிட சிறந்த [illegible] வழியில்லையா? இவருடைய [illegible] வைதீகர்களுடைய கைப்பலத்திற்கு உரை போடுகின்றதே ஒழிய பாமர மக்களின் கைவிலங்கை உடைப்பதற்கு ஒரு சிறிதும் முடியாது. இந்த உண்மையை உணர்ந்து தனது வைதீக நடிப்பெல்லாம் விட்டு விட்டு உண்மைத் தொண்டாற்ற முற்படுவாரானுல் இவருடைய மகாத்மா பட்டம் நிலைத்து நிற்பதற்கு வழியுண்டு. இவர் வைதீகர்களுடைய நிழலில் இருந்து கொண்டு அன்னிய ஆட்சிக் கெதிரில் தடை தட்டுவதை விட வைதீகத்தை எல்லாம் மிஸ் மேயோ கூட்டிச் சேகரித்த குப்பைகளோடு ஒன்று சேர்த்து கொளுத்தி அந்த சாம்பலின் மேல் இவருடைய உண்மை விடுதலைக் கட்டிடத்திற்கு அஸ்திவாரம் போடுவாரேயானுல் அக்கட்டிடத்திற்கு ஒவ்வொரு சுயமரியாதைக்காரனும் உடன் நின்று ஒத்துழைக்க உயிர் விடவும் தயாராக இருக்கிறானென்பதைக் கண்டிப்பாக நேரம் உணர விட்டாலும் கண்டிப்பு தெரிந்து கொண்டு மகாத்மாவது உண்மையில் வேண்டுமென்று சமையத்தில் தானே நமது உடைய காரியங்களை அந்த நாள் வருமென்ற நம்பிக்கை எவ்வித காந்திகளாயிருந்தாலும் அவைகள் இல்லாமலும் வைதீகத்தால் ஒழிய வேண்டுமென்பதை நாம் உணர்ந்து நமது மக்களுக்கு தெளிவாய் தெரியும்படி செய்வதே சிறந்த கடமையாக இருக்கிறது.

தேசதுரோகிகள் யார்?

(ஜோலார்ப்பேட்டை வி. பார்த்தசாரதி.)

நெருக்கடியான இச்சந்தர்ப்பத்திலும் சுயமரியாதைக்காரர்கள் காங்கிரசை எதிர்க்கிறார்களென்று சில வைதீக வெறிபிடித்தவர்களும், பார்ப்பன வால் பிடிக்கும் சில பார்ப்பனரல்லாதார்களும் சுயமரியாதைக்காரர்கள் தேசத்துரோகிகளென்றும், சுயராஜ்யம் வந்தால் இவர்களை நாடு கடத்துவோம், என்றும் முன் பகிரங்கமாய் சொன்னார்கள். இன்று வீட்டிற்குள் சொல்லி வருகிறார்கள். உண்மையோ! சுயமரியாதை இயக்கம் தோன்றி எழு வருஷங்களாக எவ்வளவோ எதிர்ப்புக்கிடையே அஞ்சா நெஞ்சுடன் உண்மையை பாமர ஜனங்களிடையே எடுத்துச் சொல்லி இன்று ஒருவராலும் அசைக்க முடியாதென்றிருப்பதைப் பத்திரிகை உலகில் யாரும் மறுக்க முடியாது. பணக்காரர்களாலும் வியாபாரிகளாலும், காப்பி ஓட்டல்காரர்களாலும், காந்தி, கதர், என்று சொல்லிக் கொண்டு பாமர மக்களை ஏமாற்றி பணம் பறிக்கிறார்களென்று சொன்னோம். கடவுளையும், புராணத்தையும், சொல்லி இனி ஏமாற்ற முடியாதென்று உணர்ந்த பார்ப்பனர்கள் காந்தி, காங்கிரஸ் என்று ஏமாற்றுகிறார்கள் என்று சொன்னோம். சில சுயநலக்காரர்கள் அயோக்கியமான முறையிலே சுயமரியாதைக்காரர்களை தாக்கி பத்தி, பத்தியாய் எழுதிவருவதை சில பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். நாங்கள் சொன்னது பொய்யா—மெய்யா என்பதை இங்குதான் கவனிக்கும்படி வாசகர்களை வற்புறுத்துகிறேன். காந்தி என்றால்தான் ஏமாறும் சோணகிரிகள் இருக்கிறார்களென்று தெரிந்து, காங்கிரஸ் உண்மை உழைப்பாளி என்று மயக்கி ஓட்டை பறித்து, பொதுஸ்தாபனங்களைக் கைப்பற்றிக்கொண்டிருந்தார், பார்ப்பனர்கள் இன்று எங்கே என்று பாருங்கள் கதரை உடுத்திக்கொண்டு காங்கிரசைப் பற்றிவானளாவப் பேசிக்கொண்டு ஒற்றைக்கு இரட்டையாய் போலிகதரை விற்ற ஜவுளி வியாபாரிகள் எங்கே என்று தேடுங்கள்! தேச துரோகிகள் யார் என்பதை ஆழ்ந்து யோசித்து பாருங்கள். காங்கிரஸ் பார்ப்பன தலைவர்கள் சிறை சென்ற அழகை கவனியுங்கள். டாக்சி மோட்டார்களில் துண்டு பிரசுரம் வழங்கிக் கொண்டு அடி, உதையில்லாமல் சிறை சென்றிருக்கிறார்கள். கை, கால், மண்டை உடைத்துக்கொண்டு கஷ்டப்படுவது யார்? பார்ப்பனரல்லாதாரே காங்கிரஸ்காரர்களை கோபமூட்ட இதை இதை எழுதவில்லை. சுயமரியாதைக்காரர்கள் காங்கிரசில் இருக்கும் ஊழல்களை எடுத்து சொல்லுவதை நம்பாமல் மயங்கியிருக்கும் பார்ப்பனரல்லாதார்கள் இனியாவது காங்கிரசிலிருந்து விலகி சுயமரியாதையில் சேர்ந்து ஒத்துழைக்க எச்சரிக்கிறேன். சுயமரியாதை இளம் சிங்கங்கள் போலி வேஷக்காரர்கள் சொல்லுவதை பொருட்படுத்தாமல் உண்மையை எடுத்துச்சொல்லத் தயங்காமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அலகாபாத் பெண்போலீஸ் வெற்றி.

ஸ்ரீமதி எலியட் அலகாபாத் தலைமைப்போலீசாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர் இன்று விதேசி துணிக்கடைகளில் மறியல் செய்துகொண்டிருந்த ஆறுபெண்களைக் கைது செய்ய உதவி செய்தார். எட்டு மறியல் தொண்டர்களையும் போலீசார் கைது செய்தனர்.

பரிமளா--பாலசுந்தரம்.

மறுமணத்திற்கு பெற்றோர் தடையும், சகோதரனின் ஆதரவும்.

[திருமதி S. நீலாவதி.]

(சென்றவாரத் தொடர்ச்சி.)

அந்தோ! என்ன அநியாயம்! கணவரை இழந்த பெண்கள் நம் நாட்டில் படும் துன்பங்களை இங்கு விவரிக்க இயலுமோ? சூதுவாதறியாத பரிமளா புஷ்பம் வாங்கித் தரும்படி தன் தாயாரை வேண்டினாள், இதில் என்ன தவறு இருக்கின்றது? இருக்கட்டும். விஷயத்தைத் தொடங்குவோம். பரிமளாவின் வேண்டுகோளை அவளின் தாயார் எவ்வாறு நிறை வேற்றக் கூடும்? முடியாத காரியமன்றோ? ஆகவே, பரிமளாவின் தாயாரும், சீனிவாசலு நாயுடுவின் மனைவியுமான, திரு. சீதா லெட்சுமி அம்மாள் மிகுந்த சஞ்சலப்பட்டு வாங்கக்கூடாதென்ற விரதத்தை எடுத்துச்சொன்னால், பெண் மனம் நோகுமென்று கருதி, கூப்பிட்டு மிகவும் அநியாயமாக விலை கேட்டு அனுப்பி விட்டார்.

இச்சம்பவம் நடந்த ஓர் வாரத்திற்குப் பின், பரிமளா தன் தலையைக் கோதி பின்னல் போட்டு நெற்றியில் சாந்துப் பொட்டு வைக்கப் போகும் சமயத்தில், திடீரென தாயார் கண்டு "அடி பாவி மகளே!" நீ வாங்கி வந்த வரத்திற்கு இந்த கோலமெல்லாமா வேண்டும்? என்று ஆத்திரத்தோடு மொழிந்து, கண்ணீர் சொரிந்து, பொட்டைக் கலைத்து, சடையை அவிழ்த்து விடும்படி கூறினார். இந்நிலை கண்ட பரிமளா திக்பிரமை கொண்டு சிலையென நின்று கண்ணினின்றும் நீர் தாரை தாரையாய் வடித்துப் பின், ஒருவாறு மனதைத் திடப்படுத்தி, மிகவும் பணிந்து தாயாரை உண்மை உரைக்கும்படி வற்புறுத்தினாள். தாயாரும் மிகுந்த துக்கத்தோடு விடயங்களை எடுத்துக் கூறினார். அந்தோ! அவைகளைக்கேட்ட பரிமளாவின் மனம் அச்சமயத்தில் பட்ட பாடு அவளுக்கே தெரியும்; அன்றி அவள் போன்ற நிலையிலுள்ளார்களே தெரியும் என்பதைத் தவிர வேறு ஒன்றும் என்னால் சொல்ல முடியவில்லை. ஆயினும் என் செய்வாள்? என் செய்ய முடியும்? ஆனால் பரிமளாவின் பெற்றோர்கள் வைதீகப் பித்துடையவர்களாயிருந்தாலும், பரிமளாவும் அவள் சகோதரன் பலராமனும் சீர்திருத்தப் பிரியர்களாயிருந்தனர். தன் தங்கை விதவையானதிலிருந்து, மறுமணம் செய்தாக வேண்டுமென்னும் எண்ணம் பலராமன் மனதில் வேரூன்றி நின்றது. இதை ஒருவரிடமும் காட்டிக்கொள்ளவில்லை, பற்பல சமயங்களில் பரிமளாவின் மனதைப் பரிசோதனை செய்து பார்த்தார். மறுமணத்திற்கு பூரண ஆதரவைக் கண்டார். அப்புறம் வேறு செய்ய வேண்டும்? தங்கைக்கு மணவாளனைத் தேடுவதில் சிறிது கவனம் செலுத்தினார். இதைப்பற்றி சிறிதளவு கூட பரிமளா அறியாள். தன் சகோதரர் இவ்வாறு தீவிர சீர்திருத்த வாதியாயிருப்பாரென்றும், துணிந்து தனக்கு மறுமணம் நிகழ்த்த முற்படுவரென்றும் அவளுக்கும் தெரியவாராது. என்றுனும், மறுமணம் முடித்துக் கொள்ள வேண்டுமென்னும் பேரவா மட்டும் பரிமளாவின் உள்ளத்தில் பூரணமாகக் குடி கொண்டிருந்தது. தனது எண்ணத்தை நெடு நாள் மறைத்து வைத்திருக்க அவளால் முடியவில்லை. ஆகவே ஓர் நாள் தன் தாயாரோடு உரையாடிக் கொண்டிருக்குங் காலையில் தன் விருப்பத்தைத் தெரிவிக்கலானாள் வாசகர்களே! மகளின் விருப்பத்திற்குத் தாயார் இணங்குவது எவ்வாறு இயலும்? அடங்கொணா ஆத்திரத்துடன், சினங் கொண்ட முகத்துடன் பல வசைச் சொற்களைத் தன் அருமை மகளின் மேல் வாரி இறைத்தாள். ஆனால், அஞ்சா நெஞ்சம் படைத்த பரிமளா, அதைக்கண்டு அஞ்சினாளா? இல்லை, சிறிதேனும் அஞ்சவில்லை. விவாதம் பலபட்டது. அதன் பின் பரிமளாவின் தாயார் திரு. சீதா லெட்சுமி அம்மாள் சிறிது நேரம் சிந்தித்துத் தன் மகளை கீதத்தால் வயப்படுத்த முயற்சித்தார்.

(மாடு மேய்க்கும் கண்ணே
என்ற மெட்டு)

தாய் சொல்வது.

ஆருயிர் செல்வமே!
அன்னை வார்த்தை மீறேல்.
இதைக் காரியமினிட
ஏற்குமோ உந்தனக்கு
சுந்தர மாமகளே!-
சொல்வதைக் கேள்கண்மணியே! (ஆ)

(மகள் சொல்வது.)

ஏற்காதென்று சொல்லி-என்னைத்
தடை பண்ணுவதேனம்மா தாரணியில்
இயம்பிடு நீரேயம்மா-
தம்பதியாகுக தாயே!
தடை சொல்லாத நீயே!

தாய் சொல்.

தம்பதியாவதுந்தன்-
தலையெழுத்தல்லவம்மா,
தவறியதை மீண்டும்-
தானடைய முடியாதம்மா-
அன்பின் மணியே நீ
அன்னை வார்த்தை கேளாய்.

மகள் சொல்.

தவறியதை ஆண்கள்-
தானடைய பெண்களுக்கு
தடையுத்தரவு சரியோ-
செய்திட தகுமோ தான்.
தம்பதியாகுக-தாயே?
தடை சொல்லாதே நீயே?

தாய் சொல்.

ஆண்களோடு பெண்கள்-
ஆ ஆ போட்டி போட்டுமே,
ஆகும் காரியம் என்னும்-
அருமைக் கண்ணே உணர்வாய்.
ஆருயிர்ச் செல்வமே
அன்னை வார்த்தை மீறேல்.

உலக வழக்கறியா
உம்மோடு யான் பேசினால்
ஒன்றும் பயனில்லை-
யென்றே புலம்புகின்றேன்.
ஓர வஞ்சம் வேண்டாம்-
உண்மையறிவீரே!

தாய் சொல்

எல்லாமறிந்தவள் போல்-
என்னோடு பேச வேண்டாம்
எங்கள் பெயர் கெடுக்க-
எமன் போல தோன்றினாயே?
எரியுதே வயிறு-
இவ்வினைக்கென் செய்வேன்!

மகள் சொல்.

பெற்றதாயென்று மிக-
உற்றது யானுரைத்தேன்.
அன்பற்றே நீர் பேசுகிறீர்-
அடைந்ததுயரடைய
அய்யகோ தெய்வமே?
யார் துணை சொல்வாய். (ஆ)

மேற்கண்டவாறு பரிமளா தன் தாயாரோடு வாதம் புரிந்து விட்டு சரேலென்று அவ்விடத்தினின்றும் அகன்றாள். அவ்வாறு அகன்று சென்றதும் தனியே உட்கார்ந்து கொண்டு ஆ! என்ன உலகம்! என்ன அநியாயம்! புருடன் இறந்து விட்டால் என்ன? அதோடு நம் இன்ப வாழ்க்கை ஏன் பறிக்கப்படல் வேண்டும்? ஆண்கள் தம் மனைவிமாரை இழந்தால், அவர் தம் இன்ப வாழ்க்கை அவ்வாறு பறிக்கப்படவில்லையே? இது தான் சாதி வழக்கமோ? நம் இந்து மத நீதியோ? ஆ! ஈசா! எல்லாம் வல்ல இறைவனென்று சொல்லப்படுபவனே! அன்புருவான தந்தையே! நீ படைத்த மக்களுள் குறிப்பாக ஆண் பெண் இரண்டில் ஒரு பாலுக்கொரு நீதி உரைப்பதும் தகுமோ? இதனை நீ எவ்வாறு சகித்துக் கொண்டிருக்கின்றனை? இப்போது நான் மறுமணம் புரிந்து கொள்ள சித்தமாயிருக்கிறேன். ஆனால் எனக்குத் துணை செய்வார் யார்? ஆதரவளிப்பார் யார்? தாயாரின் மனப்பான்மை அறிந்து விட்டேன். இனி, தகப்பனார் சகோதரர் ஆகிய இருவர் கருத்தையறிய வேண்டும். அவ்விருவரும் என் விருப்பத்தைத் தடை செய்வார்களானால், நான் என் உயிரை மாய்த்துக் கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை." என்று பலவாறு புலம்பி நின்றாள். இனி பரிமளாவின் தாயாரைப் பற்றி சிறிது கவனிச்செல்வோம். மகளின் மனப்பான்மையை அறிந்த சீதா லெட்சுமி அம்மாள் பரிமளாவின் மேல் பெரும் வெறுப்புக் கொண்டிருப்பார்களென்பதை எடுத்தெடுத்துக் காட்ட வேண்டுவதில்லை. பெரும் வைதீகப் பித்தரான சீனிவாசலு நாயுடுவோ தன் அருமை மகளின் விருப்பத்திற்கு ஆதரவு கொடுக்கப் போகிறார்? அது இல்லையென்பதை வாசகர்கள் யாவரும் உணர வேண்டுகிறேன். பரிமளாவின் தாயார் தனது கணவர் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார். அவரும் மாலை நான்கு மணிக்கெல்லாம் வீட்டிற்கு வருபவர் அன்றென்னவோ, ஆறு மணிக்குத் தான் வந்து சேர்ந்தார். பெண்களிடம் கல்வியில்லாத காரணத்தால் ஏற்படும் இன்னல்கள் எண்ணற்றவை என்பதோடு அது அவர்கள் சமூகத்திற்கே பெரும் இழிவையும் தேடி வைக்கின்றது. (தொடரும்.)

உங்கள்

கண்ணையும்

காதையும்

கவனித்துக்கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வை மைத்தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாகயிருந்தால் கூடப்பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கறையில்லை. சத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

"Sri" Works,
Beadon St. P. O.
Calcutta.

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம் கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்:-
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தீண்டாதவர்களுக்கும், பண்ணையாட்களுக்கும் நல்லோ மாவிய கைத்தொழிலாளிகளுக்கும் என்ன செய்து விட்டார்கள்? அது போலவே முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரர் என்ன செய்து விடப் போகின்றார்கள்?

மதக்கற்பனை, ஜாதி வேற்றுமை நிறைந்துள்ள நமது இந்தியாவில் அந்தந்த வகுப்பாரே, அவரவர்களைக் காத்தல் அவசியமென அறியவும். ஆச்சலின் முதலாளி திட்டத்தில் பஞ்சமருக்கு பஞ்சமரும், இந்துக்களுக்கு இந்துக்களும், மகமதியர்களுக்கு மகமதியருமே தகுந்த பிரதிநிதிகளாவர்.

வகுப்புவாரி சுதந்திரம் சிறுபான்மையோருக்கு ஏற்பட்டால் தேசியம் (Nationalism) ஏற்படாதென்கின்றார்கள். இப்படி சொல்கின்றவர்களுக்கு தேசியம், அதாவது, தேச விசுவாசம் இருக்கின்றதா என்று கேட்கின்றோம்?

தேசியமென்றால் என்ன. இந்தப்பிரச்சினை முக்கியமானதால் இதனை சற்று விபரமாக விசாரிப்போம். தேசியமாவது என்ன? தேசத்தை நேசிப்பது என்று பொருள். தேசமென்றால் என்ன? மண்ணா? கடலா? கல்லா? இதனை நேசிப்பதென்றால் சிறியோரும் நகைப்பார்கள். பரிகாசத்திற்கு இடமாகும். தேசமென்றால் தேசத்தில் வாழும் மக்கள் என்று பொருள். ஆகவின் தேசியம் என்றால் தேச மக்களை நேசித்தல் என்று பொருள். தேச மக்களை தேசியத்தைக்கோரும் அதிகாரிகள் நேசிக்கின்றார்களா?

கவலை வேண்டாம்!

கைத்தொழிலே செல்வம்.

தற்காலத்தில் ஒவ்வொருவரும் முக்கிய கைத்தொழில்களை தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம். ஒரு இரண்டணா ஸ்டாம்பு அனுப்புங்கள். உடனே சில முக்கிய கைத்தொழில்களடங்கிய புத்தகம் அனுப்பப்படும். அதைக் கொண்டு ஒவ்வொருவரும் மாதம் 50 ரூ. முதல் 200 ரூ வரையிலும் அதற்கு மேலும் தாராளமாக சம்பாதிக்கலாம் என்பது நிச்சயம். இப்புத்தகத்தை படித்துப்பார்த்தால்தான் இதன் பயோகம் நன்கு விளங்கும். உடனே ஸ்டாம்புடன் எழுதுங்கள்! கொஞ்ச காப்பிகளே கைவசம்!! முந்துங்கள்!!!

எஸ். நாராயணசாமி,

பெரும்புகளூர், திருவாரூர் போஸ்டு, தஞ்சாவூர்.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிச்சு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,

221, தங்கசாலை வீதி,

சென்னை.

சென்ற வருஷத்தில் சுமார் 1750 யாத்ரீகர்கள் ராமமோஹனுடைய ஸ்பெஷல் ரயில்களில் 15000 மைல்கள் வரையில் தூரதேசத்திலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு பிரயாணம் செய்திருக்கிறார்கள்

ராமமோஹனுடைய
வட இந்தியா பிரயாணம்

(நான்காவது பிரயாணம்.)

சென்னையைவிட்டு புறப்படுகிறது பிப்ரவரி மீ 17௳

சென்னைக்கு திரும்பி வருகிறது மார்ச்சு மீ 21௳

வழியில்: துங்கபத்ரை, பண்டர்பூர், பம்பாய், நாசிக், நர்மதை, ஆக்ரா மதுரா பிரிந்தாவன் டெல்லி, ஹரித்வார், ரிஷிகேஷ், அயோத்தி, பிரயாக், காசி, கயா, கல்கத்தா, சிம்ஹாசலம், பெஜவாடா முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களை பார்க்க நேரிடுகின்றது.

முழுபிரயாணத்திற்கு சார்ஜு

2-வது வகுப்பு ரூ. 180. 3-வது வகுப்பு ரூ. 85.

மஹாசிவராத்திரியன்று காசிவிஸ்வநாதர் தரிசனம்.

மற்றைய விபரங்களுக்கு எழுதவும்,

ராமமோஹன் கம்பெனி,
பிரயாணிகளுக்கும், யாத்ரீகர்களுக்கும் ஏஜெண்டுகள்,
30 லிங்கசெட்டி தெரு, மதராஸ்.

"போர் முரசு".

சுயமரியாதைக் காலணா பத்திரிகை.

27-1-32ந் தேதி முதல் ஒவ்வொரு புதனன்றும் வெளிவரும்.

ஆசிரியர்:— ச. ம. சி. பரமசிவம்.

நாட்டைப் பாழ்படுத்தும் வைதீகம், குடியைக்கெடுக்கும் முருட்டு நம்பிக்கை, மனிதரை மனிதர்மாய்க்கும் மிருகச்செயல் முதலியவற்றை முழுமூச்சாக அழித்து, நாட்டில் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்பி, மக்களிடையே பகுத்தறிவையும் சமதர்ம நெறியையும் நிலைநாட்ட (1932) ஜனவரி 27ந் தேதி (தை 14) முதல் "போர் முரசு" கொட்டப் பெறும்.

முரசுப் போன்ற எழுத்துக்களும் வீரஞ்செறிந்த சொற்களும் காதல்கனியும் கட்டுரைகளும் "போர் முரசு"ல் கலந்து தொனிக்கும்

அசைக்கமுடியாத அபிப்பிராயங்களையும் அறிவுச்சுணையான செய்திகளையும் அழகுமிகுந்த நடையினையும் கண்டு கேட்டு மகிழ விரும்புவோர் "போர் முரசை" நாடுவாராக.

போர் முரசுக்கு ஒவ்வோர் நகரிலும் ஏஜண்டு தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும் வேண்டியோர் முந்திக்கொள்ள

மானேஜர்

வாரம்.

"போர் முரசு"

19, பெரியசெட்டித்தெரு, உறையூர், திருச்சி.

தபால்படிப்பின் அற்புதம்!

100 மாணவர்கள்

இளமையிற் படிக்கவில்லை என்று வருந்தவேண்டாம்!

தமிழ் வாசிக்க, எழுதத்தெரிந்தவர்கள் நமது ஸ்பெஷல் மெட்ரிகுலேஷன் க்ளாஸ்களைத் தபால் மூலம் படித்து சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கேம்பிரிட்ஜ் சீனியர் பாஸ் செய்தபின் காலேஜில் சேரலாம் அல்லது இங்கிலீஷ் உயர்தர பரீக்ஷைகளுக்கு இங்கிலாந்து, கொழும்பு, சிங்கப்பூரில் வாசிக்கலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்திமார்கள், [illegible] ஆபீஸ் கீழ்தர உத்தியோகஸ்தர்களுக்கு அதிக பிரயோஜனமானது. பிராஸ்பெக்டஸுக்கு உடனே ஸ்டாம்பு அனுப்பவும்.

டைரக்டர்,

அ[illegible]ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,

ஆறுமுகநேரி S. I. R.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ...	0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகிறவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா $ 1.00.
வெளிநாடு ,, இந்தியா $ 1.50.

ஆசிரியர்:—சுவாமி அர்புதானந்தா.

விலாசம்:— மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், ஈப்போ.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்திச்செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிகரும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—2—0
தனிப்பிரதி ...	ரூ.	0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ.	18—0—0
ஆறுமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்.
'சண்டமாருதம்'
திருச்சினாப்பள்ளி.

Read the
"SUPERSTITION OF KHADI"
A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.
Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கவஸக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப்பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து சிறந்த பண்டிதராகலாம். இதன் விலை அண. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அண 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அண. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒருமுறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அண. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அண. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அண. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அண. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான—சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அண. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அண 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அண 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம் இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது

இதன் விலை அண 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அண 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதர் கிய "கன்னி மேயோ" எழுதியதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும—நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அண 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுகளையும், அகத்தியர் சரித்திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அண 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அண 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபந்யாசமும்; அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீதாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம். இதன் விலை அண 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.